பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 03 17 நவம்பர் 2018 விதி : 127




**மீண்டும் ஒரு 1964 - 1969**



**ஒப்பாரி**



**பூமிக்கு மூன்று சந்திரன்கள்**



**கழிவறையிலும் தொலைக்காட்சி**




‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’



'மாரி 2' படத்தில் தனுஷ், சாய் பல்லவி, வரலட்சுமி ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

டிசம்பரில் இப்படம் வெளியாகவுள்ளது. ஒவ்வொருவரின் கதாபாத்திரத்தையும் போஸ்டராக வெளியிடுகிறது படக்குழு.

விஜயா என்ற பாத்திரத்தில் வரலட்சுமியின் போஸ்டர் கடந்த வாரம் வெளியானது.







'தேவி 2', 'நர்மதா', 'தானா' உள்ளிட்ட தமிழ் படங்களிலும், சில தெலுங்கு படங்களில் நடிக்கிறார் நடிகை நந்திதா.

நாயகியை மையமாக வைத்து எடுக்கப்படும் ஒரு தெலுங்கு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

அஜித்தின் 'விஸ்வாசம்' படத்தின் படப்பிடிப்பு நிறைவுக்கு வந்துள்ளது.

படப்பிடிப்பு முடிவடைந்ததைத் தொடர்ந்து மீண்டும் தனது வழமையாக கெட்டப்புக்கே வந்து விட்டார் அஜித்.

படத்தின் டப்பிங் வேலைகளும் முடிவடைந்து விட்டதால், அடுத்த படமான பிங்க் மீளுருவாக்கத்தில் கவனம் செலுத்துவார் எனத் தெரிகிறது.




லோரன்ஸ் இயக்கி, நடிக்கும் 'காஞ்சனா 3' படம் ஏப்ரல் மாதம் வெளியாகிறது.

வேதிகா, ஓவியா நாயகிகளாக நடித்துள்ள இப்படத்தில் இன்னும் ஒரே ஒரு பாடல் காட்சி மட்டுமே படமாக்க வேண்டும்.

'இன்று நேற்று நாளை' படத்துடன் 3 படங்க தற்போது நடித்து வருகிறார் சிவகார்த்திகேயன்.

இவற்றைத் தொடர்ந்து தனது நண்பரான விக்னேஷ் சிவன் இயக்கத்தில் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார் சிவகார்த்திகேயன்.

படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கிறது. அனிருத் இசையமைக்கவுள்ளார்.



புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 17 நவம்பர் 2018 விதி : 127

# கோடிக் கணக்கில் விலை பேசப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள்



ஏற்கனவே நாடாளுமன்றத்தை மீண்டும் 16 ஆம் திகதி கூட்டுவதாக அறிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல தரப்பினரும் விடுத்த அழுத்தங்கள் காரணமாக 14 ஆம் திகதியன்று கூட்டப் போவதாக அறிவித்தார். ஆனால் எவரும் எதிர்பாராதவிதமாக 9 ஆம் திகதி நள்ளிரவு வர்த்தமானி அறிவித்தல் மூலம் நாடாளுமன்றத்தைக் கலைத்ததுடன் பொதுத் தேர்தலுக்கான அறிவித்தலையும் வெளியிட்டு விட்டார்.

இரு தரப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமது பக்கம் இழுக்க 100 மில்லியன் தொடக்கம் 150 மில்லியன் வரை விலை பேசப்பட்டதாகவும் சிலரின் விலை 500 மில்லியன் வரை உயர்ந்ததாகவும் அப்பெரும் மோசடி நடவடிக்கைகளைத் தடுக்கவே தான் நாடாளுமன்றத்தைக் கலைத்ததாகவும் தெரிவித்திருந்தார்.

கடந்த அரசாங்கம் நாட்டைக் கடன் சுமைக்குள் தள்ளி விட்டதாகக் கூறி மக்கள் மீது வரிக்கு மேல் வரியாகச் சுமத்தி மக்களைக் கருவறுத்த அரசாங்கம் ஏன் இந்த லஞ்சம் கொடுக்கவென வெளிக்கொண்டு வரப்பட்டும் கறுப்புப் பணத்தைக் கைப்பற்றி மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவில்லை என சிலரால் கேள்வி எழுப்பப்படுகின்றது.

பாடசாலையில் பிள்ளையைச் சேர்ப்பதற்கு ஒரு சிறுதொகையை லஞ்சமாகப் பெற்றுக் கொண்ட அதிபரைச் சிறைக்கனுப்பிய நீதி இவ்வளவு பெருந்தொகையை ஊழல் செய்பவர்கள் மேல் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அதிலும் ஜனாதிபதி பகிரங்கமாகக் கூறுமளவுக்குப் பிரபலமான விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

லஞ்சம் வாங்கியதால் தண்டிக்கப்பட்ட ஒரு காவல்துறை உபபரிசோதகர் 'நாங்கள் றோட்டில வைத்து கொஞ்சமாய் வேண்டுறம். பிடிபட்டுப் போறம். அவையள் வீட்டிலை வைச்சுக் கோடிக் கணக்கிலை வாங்கினம். அவை எங்களை ஆளுறவையெல்ல" என்றார்.

ஒரு பொதுமகன் 'அவை மட்டுமே காசு வேண்டுறது. எலெக்சன் வந்தால் எங்களுக்கும் ஆயிரம், இரண்டாயிரம் கிடைக்கும்தானே! மக்கள் தலைவர்தான் மைத்திரி!" என்றார்.

ஆனால் இதுவரை மைத்திரியைத் தங்கள் பக்கம் வரும்படி எவரும் பேரம் பேசினார்களா என்று தெரிய வரவில்லை.

காட்சியான பணம் கைவிட்டுப் போன பின்
சாட்சி கோடேறுதடி பை பையாய் பொன் கொண்டு
பொய்யாய் சொன்னாலும் மெய்மெய்யாய் போகுமடி

# நாட்டை முன்கொண்டு செல்லும் தலைவரையே தெரிவு செய்தேன்

## - ஜனாதிபதி பெருமை



தற்சமயம் நாட்டில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடிகளி லிருந்து மீட்டு நாட்டை முன்கொண்டு செல்லத்தக்க ஒரு சிறந்த தலைவரையே தான் பிரதமராகத் தெரிவு செய்துள்ளேன் என் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும்போது பெருமையுடன் தெரிவித்தார்.

நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதாகவும் வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதாகவும் மலிவான விலையிலும் அதிக தரகுப் பணத்திலும் இரசாயனப் பசளைகளை இறக்குமதி செய்து விநியோகித்ததும் அதன் காரணமாக அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களில் நிலக்கீழ் நீர் மாசடைந்து ஏராளமான மக்கள் சிறுநீரக நோயாளர்களாக மாறியதையிட்டுப் பெருமைப்படுகிறார் போல தெரிகிறது. அத்தகைய சாதனை நிகழ்த்திய தலைவரான மஹிந்தவுடன் விவசாய, மகாவலி அபிவிருத்தி அமைச்சராகவும், சுகாதார அமைச்சராகவும் பணியாற்றிய பெருமை மைத்திரிபால சிறிசேனவுக்கு உண்டு.

அதேவேளையில் 2015 ஆம் ஆண்டு ஏன் அப்படியான தலைவரை சர்வாதிகாரி எனச் சொல்லி எதிர்த்துப் போட்டியிட்டுத் தோற்கடித்தார் என்பதைப் பற்றி அவர் எதுவும் கூறவில்லை.

ஆனாக்கா அந்த மடம் : ஆவாட்டா சந்தை மடம்
அதுவும்கூட இல்லேனா பிளாட்பாரம் சொந்த இடம்

# ஜனநாயகத்தைப் பாதுகாக்க இரத்தம் சிந்த வேண்டும்

## நளின் பண்டாரவின் அழைப்பு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான நளின் பண்டார ஜனநாயகத்தை நாடாளுமன்றம் மூலம் காப்பாற்ற முடியாதெனவும் இரத்தம் சிந்த வேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

வீதியில் இறங்கிப் போராடும்போது இரத்தம் சிந்துவது பொதுமக்கள் என்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்ல என்பதையும் அவர் நன்கு அறிந்தமையால் இரத்தம் சிந்த அழைப்பு விடுவதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.


எகிப்திலும், லிபியாவிலும் அரபு வசந்தம் என்ற பேரில் மக்கள் வீதியில் இறங்கிப் போராடி இரத்தம் சிந்தி சர்வாதிகார ஆட்சிகளை வீழ்த்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றி விட்டனர். ஜனநாயகம் காப்பாற்றப்பட்டு விட்டது. ஆனால் அந்த ஜனநாயகம் மக்களைக் காப்பாற்றவில்லை. முன்பை விடப் பல மடங்கு இன்னல்களை அனுபவிப்பதுடன் இன்னும் இரத்தம் சிந்துகின்றனர்.

2015 இல் சகோதர சர்வாதிகாரத்தை விழுத்தத் தேர்தல் மூலம் போராடி ஜனநாயகத்தைக் காப்பாற்றியதாகக் கூறப்பட்டது. இப்போ மீண்டும் இரத்தம் சிந்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றும்படி கேட்கப்படுகின்றது. சர்வாதிகார ஆட்சியில் அரைகுறையாக விற்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் ஜனநாயக ஆட்சியில் முழுமையாக விற்கப்பட்டுச் சாதனை நாட்டப்பட்டுள்ளது.

நாட்டு வளங்களை விற்றுத் தீர்க்கவும் மக்கள் இரத்தம் சிந்த வேண்டுமா? சில கேட்பது காதில் விழுகிறது. தொழிலமைச்சராகப் பதவி வகித்த அவர், தொழிலாளர் இரத்தம் சிந்தாத காரணத்தால்தான் அவர்களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாவாக உயர்த்த நடவடிக்கை எடுக்கவில்லையோ எனத் தெரியவில்லை.

கொக்கரிப்பில் இரத்தம் சிந்தும் போராட்டம்
கோடிக்குள் கோடி கோடி பரிமாற்றம்

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்




















## உங்களுக்குத் தெரியுமா?

ஈராக் நாட்டிலுன் இந்த புத்தக சந்தையில் இரவிலும் புத்தகங்கள் அப்படியே வெளியில் வைத்து சந்தை மூடப்படும். அதற்கு அவர்கள் கூறும் பதில்:












புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## மாவீரர் நாள்: நினைவேந்தத் தயாராவோம்

தாம் நேசித்த மண், மக்களின் விடுதலைக்காக சத்திய வேள்வியில் தங்கள் இன்பங்களையும், இன்னுயிர்களையும் ஆகுதியாக்கிய புனிதர்களை நினைவுகூரும் மாவீரர் வாரம் வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகிறது. நாட்டின் அரசியல் சூழல் பூதகாரமாகி நிற்கும் நிலையில் மாவீரர் நாள் நிகழ்வுகளும் கடந்த வருடங்களில் இடம்பெற்றது போல் 'அரசியல்பட்டு மக்களிடம் இருந்து அந்நியப்பட்டு விடுமோ' என்ற அச்சம் எழுந்துள்ளது.

ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து மாவீரர்களை நினைவேந்த மக்களுக்கு ஓரளவு சுதந்திரம் கிடைத்தது. இதை வாய்ப்பாகப் பயன்படுத்தி தமிழ் அரசியல்வாதிகள் மாவீரர் துயிலும் இல்லங்களை தங்கள் பரம்பரை சொத்துக்கள் போல பங்குபோட்டுக் கொண்டு நினைவேந்தல் நிகழ்வுகளை அரசியல்மயப்படுத்தினர். கடந்த ஆண்டு இந்த நிலைமை மோசமடைந்திருந்தது. கட்சி ரீதியாக மாவீரர் துயிலும் இல்லங்களைப் பிரித்துக் கொண்டு மாவீரர் நாள் நிகழ்வில் தங்கள் அரசியல் கூத்துகளை அரங்கேற்றினர்.

தாயகக் கனவுடன் சாவைத் தழுவிய மாவீரர்களை தங்கள் சுயலாப அரசியலுக்காகக் கூறுபோட்டார்கள் அரசியல்வாதிகள். இம்முறையும் அவ்வாறான நடவடிக்கைகளைக் கைக்கொள்ளவே அவர்கள் முனைப்புக் காட்டி வருகின்றார்கள். 'மாவீரர் நாளையும் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளையும் கடைப்பிடிக்க அரசியல் சாராத நினைவேந்தல் குழு அமைக்கப்பட வேண்டும்' என ஏற்கனவே வலியுறுத்தப்பட்ட போதும் அது இன்றுவரை சாத்தியப்படவில்லை.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கும் சூழலில் தங்கள் வாக்கு வங்கியை தக்கவைக்கும் – அதிகரிக்கும் நோக்கில் மாவீரர் நாளை பகடையாகப் பயன்படுத்தும் திட்டத்தில் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளனர். இதற்கு எதிராக தற்போதைய அரசாங்கம் நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விடும் வாய்ப்பும் உள்ளது. ஆனால் மக்கள் எழுச்சியுடன் நடக்கும் நிகழ்வுகளை தடை போடுவதற்கு அரசாங்கம் பின்னடிக்கும். எனவே அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் பொதுக்குழு ஒன்றை ஏற்படுத்தி மாவீரர் நினைவேந்தல் குழு அமைக்கப்பட வேண்டும்.

நினைவேந்தல்களில் அரசியல்வாதிகள் மக்களில் ஒருவராகப் பங்கேற்கும் சூழல் நிலவ வேண்டும். வழமையான மரபுகளுடன் – புனித நாளாக மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரசியல் தாண்டிய மக்களின் நிகழ்வாக நடக்கும் இந்த நிகழ்வை விடுதலைப் புலிகள் அமைப்பில் மூத்த போராளிகளாக இருந்தவர்கள் வழிகாட்ட வேண்டும். மக்களுக்காக – தாயகத்துக்காக வீரச்சாவைத் தழுவிய உத்தமர்களை நினைவுகூரும் நாளில் பேதங்கள் மறந்து தமிழ் மக்களாக அனைவரும் ஒன்றிணைவோம்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 28

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

மழைத்துளிகள் பன்னீர்த்தூவலாக வானிருந்து இறங்கின. மழைமேகம் கறுத்துத்திரண்டு பாரத்தைக்கொட்டிக் கொட்டிவிடத் துடித்துக் கொண்டிருந்தது. குளிர்ந்த காற்றுக்கு தசை சுருங்கிய உடலம் நடுங்கத்தொடங்கியது. எஞ்சியிருந்த சக்திகளையும் வெகுதூர நடையால் இழந்தது போன்ற வெறுமை. மின்னல்கள் கிழக்கு மூலையால் கொழுத்தி எறிந்த ஈர்க்குவானப் பட்டாசு போல தோன்றி வளைந்தாடியது. முழக்கம் கொடூர ராகதாளத்தோடு காதைப் பிளக்குமாப் போல பூச்சாண்டி காட்டியது. பக்கம் பக்கமாக கொட்டி எறிந்து உயிர் குடித்த கொத்துக்குண்டு பொஸ்பரஸ் குண்டு, எறிகணைகள், கிபிர் குண்டுகளை விட முழக்கம் குறைந்துதான் குமுறியது.

நலிந்த மனதினரை எண்ணி எண்ணி கண்ணீர் வடிக்கும் இதயமாக மழைமேகம் திரண்டு உருண்டது. மழை பொழிந்தால் பிள்ளைகளோடு மாற்றுடைகளும் நனைந்துவிடும். பெரியவர்கள் மழையில் நனைந்து ஈரமாகிக் காயலாம். குழந்தைகளை எப்படி நனையாமல் காப்பது. பனைவடலிக்கு அருகாக மழைத்துளிகள் படாதபடி குழந்தைகளை வைத்துக்கொண்டு குந்தியிருந்தோம். கொட்டித்தீர்க்க வஞ்சம் கொண்ட மழையை காற்றுக் கரங்கள் அடித்துத்தள்ளி வேறொரு புறமாக சரித்துக் கடந்தது. வானம் சற்று வெளித்ததற்கு அறிகுறியாய் நட்சத்திரங்கள் குழந்தைகளைப் போல கண்களைச் சிமிட்டின.

மழை வெக்கையும் மனித வெக்கையும் ஒருவித அசௌகரியத்தைக் கொடுத்தது. இப்போதைய தேவை குளிக்க வேண்டும். இல்லையேல் ஈரத்துணியால் குழந்தைகளைத்துடைப்பது போல துடைத்து உடைகளை மாற்றிக் கைவசம் இருக்கும் குழந்தையின் பவுடரைப் பூசிக்கொள்ள வேண்டும். இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கும் போதுதான் பல தண்ணீர்ப் போத்தல்களுடன் ஒரு வயோதிபத் தாய் எங்களைக் கடந்து செல்வதைக் கண்டேன். 'அம்மா தண்ணீ எங்க கிடைச்சது ?" எனக்கேட்டேன். என்னை தன் கண்ணொளி மங்கிய கண்களை கையை தனது நெற்றியோடு வைத்து உற்றுப்பார்த்தவர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. என்னிடம் ஒரு போத்தல் தண்ணீரைத் தந்துவிட்டு தண்ணீரிருக்கும் இடத்தை சைகையால் காட்டினார்.

'என்னிடம் தண்ணி இருக்கம்மா. நீங்கள் கொண்டு போங்கோ" என அவர் தந்த தண்ணீர்ப் போத்தலை திருப்பி நீட்டினேன். வாங்க மறுத்த அந்த மூதாட்டி குனிந்து குழந்தையின் கன்னத்தை செல்லமாய்த் தட்டிவிட்டு நடக்கத் தொடங்கினார். போரின் வலிகளால் மொழியிழந்தவளில் அந்தத் தாயும் ஒருத்தியாக குரல் காட்டாமலே குணங்காட்டி மறைந்தாள்.

சற்று நிதானித்துக் கொண்டு மண்டித்தண்ணி கிடந்த போத்தல் நீரை ஊற்றிவிட்டு அந்தப் போத்தல்களைச் சுத்தப்படுத்தப் பானைக்குள் இருந்த தண்ணீரை போத்தல்களுக்குள் ஊற்றிப் பத்திரப்படுத்தி இருந்த உடைமையால் மூடி பிள்ளையை கணவரிடம் கொடுத்துவிட்டு அந்த வயோதிபத்தாய் சொன்ன திசைநோக்கி தோழியையும் தோழியின் மாமியையும் அழைத்துக்கொண்டு நடக்கத்தொடங்கினேன். எனது கையில் பானையும் லக்ஸ் சோப்பும் இருந்தன.

நடந்து களைத்து பசியுற்ற மனிதர்களாய் குண்டுச் சத்தமில்லாத ஒரு நாளாகக் கருதி தொலைத்த தூக்கத்தை ஒரேநாளில் அனுபவிப்பது போல சர்வ சத்தங்களும் அடங்கித் துயின்றனர். எங்களைப்போல சாமக்கோழிகள் ஆங்காங்கே நடமாடிக் கொண்டிருந்தனர். த்ண்ணீர் இடத்தை அடைந்து பாத்திரங்களில் தண்ணீர் எடுக்க குழாயைத் திருகினால் தண்ணீர் வரவில்லை. தோழியும் அவளது மாமியும் என்னையும் பானையையும் பற்றாக்குறைக்கு நான் வைத்திருந்த சவர்க்காரத்தையும் பார்த்து குந்தியிருந்து சிரிக்கத் தொடங்கினர்.

எனக்கும் சிரிப்புத் தாங்க முடியவில்லை. கொஞ்சநேரம் நான்தான் அவர்களுக்குப்பேசு பொருளானேன். பிறகு 'இப்படியே கொஞ்சம் சுற்றிப் பார்ப்பம்" எனச் சொல்லியபடி மூவரும் முட்கம்பி வேலிகளுக்கு அருகாக செல்லாமல் உட்பக்கமாக மின்குமிழ்கள் ஒளிர்ந்த பக்கமாக நடந்தோம். அப்படி நடந்தபோதுதான் இன்னொரு தண்ணீர் தாங்கியைக் கண்டோம். வந்த இருவரும் முற்கூட்டியே சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள். 'உங்கள் கவலைகள் மறக்க நானொரு கருப்பொருள் ஆனேனே" என நானும் பகிடி பேசியபடி அந்த தண்ணீர் தாங்கியின் குழாயைத் திருகினேன். ஆச்சரியம் தாங்க முடியல தண்ணீர் வந்தது.

நான் அதன்கீழ் குந்திக் கொண்டேன். நிலம் ஈரமடையவில்லை. நாங்கள்தான் அதை முதலில் திறந்திருக்கிறோம். அவசர அவசரமாக சோப் போட்டு நின்ற உடையோடு குளித்தேன். வந்தவர்களுக்கும் சோப் கொடுக்க குளித்துக் கொண்டார்கள். அதை இராணுவத்தினர் வைத்திருந்ததை இந்தச் சனம் காணல போல. தேவையை நிறைவு செய்த பின் தண்ணீர்ப் பானையுடன் வந்து உடைமாற்றி பிள்ளைகளையும் மொப் பண்ணி காயப்பட்டவரையும் குழந்தைபோல துடைத்து விட்டு மீண்டும் அந்த இடத்திற்குப் போகும்வரை யாருக்கும் அங்கு தண்ணீர் இருப்பது தெரியவில்லை.


காரணம் என்னவாயிருக்கும் என சிந்தித்தபோது மின்குமிழ் ஒளிர்ந்தாலும் பார்வைக்கு பனங்கூடலால் அது மறைந்திருந்தது. மீண்டும் தண்ணீரை ஏந்தியபடி 'இஞ்ச தண்ணீ கிடக்கு வாங்கோ" என ஒரு குரல் ஓசை வைத்தேன். தூங்கிக் கிடந்த ஆத்மாக்கள் தேனீக்கள் போல மொய்த்துக்கொண்டன.


(சாட்சியம் நீளும்)

■ யோகநாராயணன்

# மீண்டும் ஒரு 1964 -1969







1964 - 1969 காலப் பகுதியில் ஏற்பட்டது போன்ற ஒரு அரசியல் களநிலையும் அதற்கு தமிழ்த் தலைமைகள் முகம்கொடுத்த முறையையும் போன்றே அரை நூற்றாண்டுக்குப் பின்பு அதாவது ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்குப் பின்பு ஒரு நிலைமை தோன்றியுள்ளது. மேலோட்டமாகப் பார்க்கும்போது சில வித்தியாசங்கள் தென்பட்டாலும் அடிப்படையில் ஒரே மாதிரியானவை என்பதில் சந்தேகமில்லை.

1964 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தொலைக்காட்சி பாவனைக்கு வராத நிலையில், வானொலி அரசியல் விடயங்களில் பெரிதாக ஈடுபாடு காட்டாத நிலையில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன மாமனாரான டி.ஆர். விஜயவர்த்தனவால் நடத்தப்பட்ட லேக் ஹவுஸ் என அழைக்கப்படும் ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனமே ஊடகப் பரப்பில் ஆதிக்கம் செலுத்தியது. தினமின, தினகரன், டெய்லி நியூஸ் போன்ற பத்திரிகைகளே மக்களின் சிந்தனையை வடிவமைக்கும் வகையில் வலிமை பெற்றிருந்தன. அவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான பிரசாரங்களை முன்னெடுப்பதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்ட தேசிய நலன்கள் தொடர்பான நடவடிக்கைகளை எதிர்ப்பதிலும் தீவிர அக்கறை காட்டின.

இந்நிலையில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் லேக் ஹவுஸ் ஊடக நிறுவனத்தை தேசிய மயமாக்குவது என்ற முடிவை எடுத்து நாடாளுமன்றில் பிரேரணை கொண்டு வந்தது. அதை எதிர்த்து தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி என்பன ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மேற்படி பிரேரணையை எதிர்த்தன. அப்போதும் ஜனநாயகத்தைக் காப்பாற்றவே அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தமிழ்த் தலைமைகளால் கூறப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சி.பி.டி.சில்வா தலைமையிலான 13 பேர் கொண்ட குழுவும் கட்சி மாறிப் பிரேரணையை எதிர்க்கவே அது தோல்வியடைந்து அரசாங்கம் பதவி விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

1965 இல் இடம்பெற்ற தேர்தலில் இரு தரப்பினருக்கும் ஏறக்குறைய சமனான ஆசனங்கள் கிடைக்கவே தமிழ்த் தலைமைகளை இணைத்துக் கொண்டு ஐ.தே.கட்சி ஆட்சியமைத்தது. தமிழரசுக் கட்சியின் சார்பில் அமரர் திருச்செல்வம் அமைச்சரானார். தமிழ் மக்களின் இனப் பிரச்சினைத் தீர்வாக டட்லி - செல்வா ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறியே தமிழரசுக் கட்சி ஆட்சியில் பங்காளியானது. நான்கரை வருடங்கள் ஆட்சியில் இணைந்து செயற்பட்டபோதும் டட்லி - செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்படாத நிலையில் திருமலை கோணேசர் கோவில் வலயத்தை புனிதப் பிரதேசமாக்கக் கோரி அது மறுக்கப்பட்டதனால் ஆட்சியை விட்டு வெளியேறியது.

அடுத்த தேர்தலின்போது 1958 பண்டா - செல்வா ஒப்பந்தம் மூலமும் 1969 இல் டட்லி - செல்வா ஒப்பந்தம் மூலமும் சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டன என்று சொல்லி தமிழ் மக்களிடம் தமிழரசுக் கட்சியினர் வாக்களிக்குமாறு கோரினர். அதேபோன்றதொரு நிலைமை இப்போது 2018 இன் பிற்பகுதியிலும் ஏற்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்கள் அவருக்கு ஆதரவு வழங்க வேண்டுமெனக் கோரினர். நடுநிலைமை வகிக்கப் போவதாகக் கூறிய முன்னாள் முதலமைச்சரைத் திட்டித் தீர்த்தனர். தமிழ் மக்களும் மைத்திரிக்கு அமோக ஆதரவை வழங்கினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்த போதும் சகல விடயங்களிலும் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி வந்தனர். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்களில் அரசு காட்டிய அக்கறையின்மையை அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுத்தால் மஹிந்த தரப்பினர் அதைப் பயன்படுத்தி விடுவார்கள் எனக் கூறி நியாயப்படுத்தி வந்தனர். புதிய அரசியலமைப்பு மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமெனக் கானல் நீராகக் காட்டி வந்தனர்.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த அதிரடி நடவடிக்கை காரணமாக ரணில் விக்கிரமசிங்கவின் பதவி பறிக்கப்பட்டதுடன் மஹிந்த பிரதமராகியும் விட்டார். எந்த மஹிந்த ஆட்சிக்கு வந்து விடுவார் என்பதற்காக அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கினார்களோ அந்த மஹிந்த ஆட்சிக்கு வந்துவிட்டார். ஐ.தே. கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து கொண்டு வந்தால் மட்டுமே புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற முடியும். எனவே இனி புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை.

1964 இல் ஜனநாயகத்தைக் காப்பற்ற பத்திரிகை மசோதவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து வாக்களித்துப் பின்பு ஜனநாயகத்தைக் காக்க நான்கரை வருடங்கள் ஆட்சியில் பங்குகொண்டு பின் 1969 இல் தமிழ் மக்களைக் காப்பாற்றமலேயே தமிழரசுக் கட்சி அரசிலிருந்து வெளியேறியது. 2015 இல் ஜனநாயகத்தைக் காப்பாற்ற மைத்திரியை ஆட்சிப் பீடம் ஏற்றிக் கடந்த மூன்றரை வருடங்களாக ஜனநாயகத்தைக் காப்பாற்ற அரசுக்கு ஆதரவு வழங்கி இப்போது 2018 இல் தமிழ் மக்களைக் காப்பாற்றமலே நாடாளுமன்றப் பதவிகளைக் கூடத் தமிழரசுக் கட்சி இழந்து விட்டது. எனினும் ஜனநாயகத்தைக் காப்பாற்றத் தொடர்ந்து. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவுள்ளது.

1964 - 1969 காலப் பகுதியில் எழுச்சி பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கி ஜனநாயகத்தைக் காப்பாற்றும் யுகம் மீண்டும் முனைப்புப் பெற்றுள்ளது. குறிப்பாகச் சொல்லப் போனால் கடந்த 50 ஆண்டுகளில் தமிழ் நாடாளுமன்றத் தலைமைகள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக ஒரே இடத்தில் நிற்கின்றன. ஆனால் தமிழ் மக்களோ தொடர்ந்து தங்கள் உரிமைகளை இழந்து கொண்டிருக்கின்றனர்.

ஜனநாயகம் என்பது மக்களால் தெரிவு செய்யப்படும் மக்களுக்கான மக்கள் ஆட்சி என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான கோட்பாடாகும். ஜனநாயகத்துக்கான முதல் புரட்சி பிரான்ஸில் எழுச்சி பெற்றபோது ஜனநாயகத்தின் இலட்சியமாக சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் என்பனவே பிரகடனப்படுத்தப்பட்டன.

இந்த உயரிய கோட்பாட்டுக்கும் நியாயபூர்வமான இலட்சியத்துக்கும் அமைவான ஒரு ஜனநாயகம் இலங்கையில் நிலவியதா? என்ற கேள்வியும் அப்படியான ஒரு ஜனநாயகத்தைக் காப்பாற்றவே இன்றைய ஜனநாயகத்துக்கான போராட்டம் இடம்பெறுகிறதா? என்ற கேள்வியும் எழுமானால் நிச்சயமாக சாதகமான பதில் எதுவும் கிடைக்காது. அதிலும் தமிழ் மக்கள் களத்தில் இறங்கி இந்த ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய அளவுக்கு இதனால் தமிழ் மக்களுக்கு எந்தவித பலன்களாவது கிடைத்ததா என்றால் அதுவுமில்லை.

குறிப்பாக 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட ஜெனிவா தீர்மானத்துக்கு இலங்கையும் ஆதரவு வழங்கியிருந்தது. இரண்டு வருடங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய அது நிறைவேற்றப்படாமலே மேலும் இரு வருடங்கள் கால அவகாசம் கோரப்பட்டது.

(18ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் வாடகை ஓட்டோக்களில் மீற்றர்? சில சோம்பேறிகளுக்கு விழுந்த இடி!






முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் விவகாரம் தொடர்பாக, முன்பும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டபோது வட மகாணசபையினரின் தலையீட்டால் கைவிடப்பட்டது. யாழ்.மாவட்ட செயலர் எடுத்த மக்கள் நலன் சார்ந்த இந்த விடயத்தை தலையிட்டு நிறுத்திய வட மாகாணப் போக்குவரத்துக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் அல்லது அதற்குப் பொறுப்பாகவிருந்த அரச அதிகாரிகள் ஏன் அதைத் தடுத்தனர் என்பது புதிரானவிடயமாயிருக்கிறது. அப்படித் தமது அதிகார வரம்புக்குட்பட்டதென மாவட்டச் செயலரின் நடவடிக்கையைத் தடுத்தி நிறுத்தியவர்கள் தாமாக முன்வந்து அந்த நடவடிக்கையைத் தொடர்ந்திருக்க வேண்டும். “தானும் செய்யான் தள்ளியும் இருக்கான்” என்றதைப் போல் வட மாகாண சபை நடந்துகொண்டிருக்கிற விடயம் அப்பட்டமாகத் தெரிகிறது. இது நமக்குத் தெரிந்தவிடயம். இதைப்போல மக்களுக்குத் தெரியாது எத்தனை விடயங்கள் நடைபெற்றிருக்கும்? எவ்வளவு மோசடிகள் நடைபெற்றிருக்கும்?

அது மட்டுமல்ல முச்சக்கரவண்டி தொடர்பாகப் பல புகார்கள் எழுந்த பின்னரும் அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளையும் முன்னெடுக்காது தமது காலத்தைக் கடத்தி மரணித்துப் போயிருக்கின்ற வட மாகாண சபை அமைச்சருக்கும், அது தொடர்பான சோம்பேறித்தனமான அதிகாரிகளுக்கும் எமது கண்டனத்தைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் முச்சக்கரவண்டிகளில் பயணம் செய்த அனுபவம் இருந்திருந்தால் சில வேளைகளில் இது பற்றிச் சிந்தித்திருப்பார்களோ தெரியவில்லை? யாழ். நகர எல்லைக்குள் இருந்து வெளியே செல்வதற்காக முச்சக்கரவண்டிச் சாரதிகளிடம் கட்டணம் பற்றிப் பேரம் பேச நேருகின்ற சந்தர்ப்பங்களில் அவர்கள் வாயிலிருந்து உதிரும் பண்பாடற்ற வார்த்தைகளால் மனம் நொந்து போனவர்கள் பலர்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முச்சக்கரவண்டி தொடர்பாக மக்களுக்கு ஏற்படும் இப்படியான சிரமங்களைக் கருத்தில் கொண்டு தனது திட்டத்தை மீண்டும் செயற்படுத்தியிருக்கின்ற மாவட்ட செயலர் நா. வேதநாயகனுக்கு எமது வாழ்த்துக்கள்.

ஆனாலும் இதற்கு முன்பு “ஏன் நீங்கள் மீற்றர் பூட்டக் கூடாது” என்று பல முச்சக்கர வண்டிச் சாரதிகளைக் கேட்டபோது அவர்கள் சொன்ன கருத்துக்களையும் மாவட்டச் செயலர் கருத்தில் கொண்டு ஆவன செய்வது பொருத்தமானதொன்றென்று எண்ணுகிறோம். “சிலர் மீற்றர் பூட்டியபின் அது தொடர்பான விற்பனைக்குப் பிந்திய சேவை தமக்கு யாழ்ப்பாணத்தில் கிடைக்கவில்லை எனப் புகார் கூறினர். அது மட்டுமல்ல அது தொடர்பான ஒரு பொதுக் கட்டண நிர்ணயமும் இல்லாததனால் தான் அதை இடை நிறுத்திவிட்டோம்” எனச் சொன்னார்கள். அத்துடன் சில வண்டிகள் மீற்றருடனும், பல மீற்றர் இல்லாமலும் சேவையிலீடுபடுகின்ற போது மக்களுக்குக் குழப்பம் ஏற்படுவதாகவும் அவர்கள் சொன்னார்கள்.

அத்துடன் மீற்றர்கள் பூட்டப்பட்ட பின்னர் அது தொடர்பாக அவ்வப்போது வருகின்ற பிரச்சினைகளை எப்படி மக்களும், அது தொடர்பான அதிகாரிகளும் எதிர்கொள்ளப் போகிறார்கள்? மீற்றர்களைப் போலியானதாகப் பொருத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. கட்டணத்தை அதிகமாகக் காட்டக் கூடியவாறு தொழில் நுட்ப ரீதியாகக் கோளாறுகளையும் ஏற்படுத்தலாம். எனவே போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான திணைக்கள அதிகாரிகள் பரிசோதகர்களை நியமிப்பார்களா? இது பற்றி எழுகின்ற புகார்களை மக்கள் எங்கு யாரிடம் தெரிவிப்பது? அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யார்?

முச்சக்கர வண்டிச் சாரதிகள் தமக்குத் தமக்கெனச் சங்கங்களை வைத்திருக்கின்றனர். அதனூடாக ஆகக் குறைந்தது தாம் பிரயாணம் செய்யும் முச்சக்கர வண்டி எந்தச் சங்கத்தைச் சேர்ந்தது, சாரதியின் பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் என்பன அடங்கிய விவரங்களைப் பிரயாணி அறிய ஏதுவாக அவற்றை ஒரு அட்டையில் அச்சிட்டு “லமினேட்” செய்து ஒவ்வொரு வண்டியில் சாரதி இருக்கையின் பின் பயணி பார்க்கக்கூடியதாக ஒட்டி வைக்க வேண்டும் எனவும் மாவட்டச் செயலர் ஒரு சட்டத்தைக் கொண்டுவரலாம். அது மக்களுக்கு மிகவும் உறு துணையாக இருக்கும். சாரதிகளும் தாம் நேர்மையாகச் செயற்பட வேண்டும் என்ற விடயத்தில் கவனமாக இருப்பர். இம்முறை இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்தபோது நடைமுறையில் இருந்தது. அது அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கைக்காகக் கையாண்டது. அதை ஏன் மக்கள் நன்மை கருதி மீண்டும் நடைமுறைப்படுத்த முடியாது?

அத்துடன் எரிபொருள் விலை அதிகரித்ததைக் காரணம்காட்டி உயர்த்திய கட்டணத்தை எரிபொருள் விலை குறைப்பின்போது மீண்டும் குறைக்க முன்வருவதில்லை. கேட்டால் “ரயர். ரியூப்பின் விலை என்ன தெரியுமா? தேய்மானம் என்ன தெரியுமா? நாங்கள் என்ன காற்றையா குடிப்பது?” என்பன போன்ற வியாக்கியானங்கள் எழும். எனவே அதற்குரியவர்களோடு மாவட்டச் செயலர் பேசி கட்டண நிர்ணயம் ஒன்றைக் கடைப்பிடித்தால்தான் மக்கள் மீற்றர் முறையில் பயனடைவார்கள்.

டெயிலிமிரர் இணையத்தின் 11 ஏப்ரல் 2018 செய்தியின்படி தெருக்கள் பாதுகாப்புத் தொடர்பான தேசிய கவுன்சிலின் தலைவர் டாக்டர். சிசிற கொடஹொட 30 ஏப்ரல் 2018 நடுநிசி முதல் முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் முறை அவசியமாக்கப் பட்டுள்ளதாகச் சொல்லி இருக்கிறார்.ஏற்கனவே மீற்றர் பொருத்துவதற்கு வழங்கப்பட்ட ஆறு மாதகால அவகாசம் 01 ஏப்ரல் 2018 அன்றுடன் முடிவடைந்ததாகவும், அன்றைய தினத்திற்குப் பின்னால் மீற்றர் பொருத்தாத முச்சக்கரவண்டிச் சராதிகளுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மீற்றர் ஒன்றின் விலை ரூபா பத்தாயிரத்துக்கு மேற்படாது முச்சக்கர வண்டிச் சாரதிகளுக்கு வழங்குவதை அதன் உற்பத்தியாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அத்துடன் அவர்கள் மீற்றர் தரத்தை தமது SLS தரத்திற்கமையவே தாயாரிக்க வேண்டும் எனவும் அவர் சொல்லி இருப்பதாக அச் செய்தி சுட்டிக்காட்டியுள்ளது. மக்களின் பாதுகாப்பையும் அவர்களுக்குப் பெறுமதிசேர் சேவையை வழங்குவதற்காகவுமே இவ்வாறு ஒரு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்

ஆனால் மேற்சொன்ன டாக்டர் கொடஹொடவின் செய்தியின்படி பயணிகளுக்குப் பணய முடிவில் இயந்திரத்தினால் அச்சிடப்பட்ட சிட்டை ஒன்றை வழங்கவேண்டும் எனவும் அதில் கட்டணம்,பயணம் செய்த தூரம் மற்றும் குறிப்பிட்ட அந்த முச்சக்கரவண்டிபற்றிய விவரங்கள் என்பனவும் அடங்கியிருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை எப்படி எம்மவர் சாத்தியப்படுத்தப் போகிறார்கள்?

# உமாஜியின் “காக்கா கொத்திய காயம்”

கனா பிரபா
(அவுஸ்திரேலியா)




இன்று எஞ்சியிருக்கும் ஈழத்துச் மக்களுக்கு மரணம் என்ற ஒன்றைத் தவிர மீதி எல்லாவற்றையும் கண்டு கடந்திருக்கிறார்கள் வயது வேறுபாடில்லாமல் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கும் ஒரு பொதுமையான அனுபவம் இது. போர் தின்ற அந்த மக்கள் மரணத்தின் நுனி வரை போய் வந்திருக்கிறார்கள். அந்த வாழ்வியல் அனுபவங்கள் ஏறக்குறைய எல்லோருக்குமே வெவ்வேறான கால கட்டத்தில் நிகழ்ந்தேறியிருக்கின்றன.

போர் உச்சம் பெற்ற எண்பத்து மூன்றாம் ஆண்டுக்குப் பின்னதான கால கட்டம் என்பதை எழுதப் போனால் ஈழத்து மக்களின் இரத்த வாடையைத் தொடாது கடக்க முடியாது என்று எண்ணுகிறேன். எனக்கும் இந்த மாதிரியான அனுபவங்கள் வாய்த்திருந்தாலும் 95 ஆம் ஆண்டுக்குப் பின்னான நேரடிக் கள அனுபவம் இல்லாது போய்விட்டது. என்னைப் போலவே இந்தப் போர்க்கால வாழ்வியல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட பலரும் ஒரு குறித்த கால எல்லையோடு நின்று தான் எழுதிப் போந்திருக்கிறார்கள்.

என்னுடைய வாசிப்பு அனுபவத்தில், இந்திய இராணுவம் ஈழத்தில் நிலை கொண்டிருந்த காலத்தில் இருந்து 2009 ஆம் ஆண்டில் முற்றுப் பெற்றாதாகக் கருதும் இறுதி யுத்தம் வரையான போர்க் கால வாழ்வு பற்றிப் பேசிய ஒரு முழுமையான நூலாக “காக்கா கொத்திய காயம்” பற்றியே சொல்லுவேன்.

உமாஜி என்ற இளைஞனை முகநூல் வழியாகத் தான் அதிகம் அறிந்திருந்தேன். வலைப்பதிவு யுகம் பரவலாக இயங்கிய காலத்தில் கூட சக ஈழத்துப் பதிவராக அவர் எழுதியதாக நினைவிலில்லை. அந்த நேரத்தில் 4TamilMedia என்ற செய்தித் தளத்தில் உமா ஜி இன் வாழ்வியல் அனுபவங்கள் எழுதப்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தாலும் உண்மையில் ஒரு பதிவையும் வாசிக்கும் சந்தர்ப்பத்தை நான் ஏற்படுத்தவில்லை. இப்போது வெளிவந்திருக்கும் “காக்கா கொத்திய காயம்” என்ற அவருடைய வாழ்வியல் அனுபவப் பகிர்வுத் திரட்டு கூட இவ்விதம் 4வுயஅடைஆநனயை இல் அவர் எழுதிய பதிவுகளின் திரட்டே. சகோதரன் மைந்தன் சிவாவின் திருமணப் பரிசாக அவர் எனக்களித்த போது படிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. ஆனால் ஒவ்வொரு பதிவையும் படித்து முடித்து உடனேயே அடுத்ததுக்கு என்னால் நகர முடியாத ஒரு உளவியல் தாக்கத்துக்கு ஆளானேன். உண்மையிலும் உண்மை இது. ஏனென்றால் இந்த எழுத்தாளன் காட்டுகின்ற அந்த வாழ்ந்து கழித்த உலகு அப்படியொன்றும் சொகுசானதல்ல. போரின் நெருக்குவாரத்தில், வாழ்வின் பல்வேறு சவால்களோடு வாழ்ந்து கழித்தவற்றைப் பதிவு செய்திருக் கிறார். ஒவ்வொரு மனிதர்களைப் பற்றியும் இவர் சொல்லி முடித்ததும் நான் உமாஜி ஆகி அந்த மனிதர்களோடு பழகி விட்டுத் திரும்புமாற் போலவொரு உணர்வை அந்த எழுத்துகள் ஏற்படுத்தி விட்டன. இப்போது சொல்லுங்கள் இதை யெல்லாம் வேக ஓட்டத்தொடு வாசித்து முடிக்கும் காரியமா?

இந்த நூல் குறித்த நயப்புக்குப் போவதற்கு முன்னர் இது குறித்த என் வெளிப்படையான இரண்டு விமர்சனத்தைச் சொல்லி விடுகிறேன்.

ஈழத்தின் இரு தசாப்தங்களை உள்ளடக்கிய இந்த வாழ்வியல் அனுபவப் பகிர்வை “காக்கா கொத்திய காயம்” என்று கவிதைத்தனமாகத் (!) தலைப்பிட்டதற்குப் பதில் இன்னமும் அணுக்கமான தலைப்பை இட்டிருக்கலாம். இன்னொன்று, இந்தப் புத்தகத்தில் மிக ஆழமாகப் பேசப்பட்டிருக்கும் போரியல் வாழ்பனுபவங்கள் பிற் பகுதியிலேயே இடம் பெற்றிருக்கின்றன. உதாரணம் ஊரடங்கு வாழ்வு. ஒரே புத்தகத்தில் கனதியான பக்கங்களோடு வந்ததிலும் இதைத் தொகுதியாக வெளியிட்டிருக்கலாம். உதாரணமாக வேதநாயகம் தபேந்திரனின் நூல் போன்று பாகங்களாகப் பிரித்து வெளியிட்டிருக்கலாம் என்பது என் கருத்து. அடுத்த நிமிடம் வாழ்வோமா என்ற நிலையாமை குறித்த கேள்வி எழும் சூழலில், போர்க்கால வாழ்வியலில், அத்தகு துன்பகரமான சூழலில் தான் உயர்ந்த நகைச்சுவை பிறக்கிறது. டுகைந ளை டிநயரவகைரட படத்தில் கண்டதை எல்லாம் நம் வாழ்வியலில் தரிசித்திருக்கிறோம். அப்படியான எழுத்தைக் காட்டுகிறார் உமாஜி.

பக்கத்துக்குப் பக்கம் எள்ளல், நகைச்சுவை என்று கனதியான சம்பவங்களிலும் இந்த எழுத்தைக் கடைப்பிடிக்கிறார்.

உண்மையில் சொல்லப் போனால் இந்தப் புத்தகத்தை எடுத்துப் படித்துக் கொண்டு போகும் போது இசேலான பொறாமையும் எட்டிப் பார்த்தது. எவ்வளவு ஆழமான எழுத்து. யாழ்ப்பாணத்தின் ஒரு மூலையிலோ கொழும்பிலோ, வன்னியிலோ நிகழ்ந்ததைக் கொண்டு போய் ஒரு உலகத் தரமான Pianist படத்தோடோ The Last Emperor உடனோ அல்லது அறிஞர் ஒருவரின் கூற்றோடோ பொருத்தி எழுதும் நுட்பம் இவருக்குக் கச்சிதமாக வாய்த்திருக்கிறது.

ஈழத்துப் பிரதேசங்களில் தான் வாழ்ந்த காலத்தில் சந்தித்த மனிதர்கள், நிகழ்வுகளைப் பற்றி எழுதினாலும் பொதுவான தமிழையே கையாண்டிருக்கிறார். பிரதேச வழக்குச் சொற்கள் கூட அந்நியப்படாமல் விளங்கக் கூடிய வகையில் குறித்த அனுபவங்களோடே இருப்பதால் தமிழகத்து வாசகனுக்கும் நெருக்கமாக இருக்கக் கூடியது.

இரண்டு தசப்தங்களைக் கடந்த புலம் பெயர் வாழ்வில் இருந்து கொண்டு தாயகம் செல்லும் போதெல்லாம் என்னோடு வாழ்ந்து பழகியவர்களைத் தேடி அவர்களின் இருப்பை அறிந்து கொள்ளும் வேட்கையை உமாஜி இந்த நூலிலும் செய்கிறார். அவரும் தேடுகிறார் இந்திய இராணுவ காலத்தில் இருந்து இறுதி யுத்தம் கண்டு, பழகிய அண்ணனில் இருந்து, மாமா, பாட்டர் முறை சொல்லி அழைத்தவர்கள் எல்லாம் எங்கே என்று தேடும் எழுத்துகளில் அந்தப் பழைய நினைவுகளைப் பதிப்பிக்கிறார். இவர்களை நானும் போயப் பார்த்தால் ; என்ன என்றவொரு ஏக்கத்தை எழுப்பி விட்டு அவர்களின் இன்றைய நிலையை நிறுத்துமிடத்தில் மனது கனதியாகிறது. உமாஜியோடு வாழ்ந்து பழகியவர்கள் இப்போது நமக்கும் அறிமுகமானவர்களாகிறார்கள்.

காலி முகத்திடலில் நின்று விடும் பட்டமும் போரியல் வாழ்வை நோக்கி இழுத்துப் போகிறது, தமிழ்த் திரையிசையை இளையராஜாவாகவும், ரஹ்மானாகவும், ஹாரிஸ் ஜெயராஜாகவும் ஏன் எங்களூர் எஸ்.ஜி.சாந்தனாகவும் ஆழ்ந்து நுகரும் போதும் அப்படியே கடக்கிறார். இதையே “யுத்தம் எமக்களித்த நாடோடி வாழ்க்கையில் நாம் கடந்து வந்த ஊர்களையும், வாழ்க்கையையும் பாடல்களே ஒரு காலப் பயணத்தினூ டு, அடிக்கடி நிகழுலகுக்குக் கொண்டு வருகின்றன” என்று சொல்கிறார். இசைவு என்ற பகிர்தலில் இசை வேட்கை கொண்ட ஒரு கலைஞனின் இன்றைய நிலையை எழுதும் போது இது ஒரு உதாரணம் தான் இவர் போல இன்னும் பலரின் உண்மையான முகத்துக்கு நமது யுத்த பூமி கரியைப் பூசி மறைத்திருக்கிறது என்ற கசப்பான நிஜமும் உறைக்கிறது. இதையே இன்னொரு வாழ்வியல் அனுபவத்தில்

“வாழ்நாள் முழுவதும் தம்மை யாருக்கோ நிஷரூபித்துக் கொண்டிருப்பது கர்ணனுக்கு மட்டும் விதிக்கப்பட்டதல்ல. தோற்றுப் போனதாகக் கருதப்படும் வாழ்நாள் போராளிகளுக்கும் கூடத்தான். வாழ் நாள் போராளிகள் ஒவ்வொருவரும் ஒருவகையில் கர்ணன்கள்தான். கர்ணன்கள் பாவம்!” என்கிறார்.

பெருமூச்சு ஒன்றை எழ வைத்து விடுகிறது.

ஏ9, ஊடரங்கு, மற்றும் விடைபெறல் ஆகிய பகிர்வுகளைப் படிக்கும் போதே அந்தக் காலகட்டத்து யுத்த நெருக்கடிகளும், அடுத்த நிமிடம் வாழ்தலுக்கான சவாலும் மீளவும் நிகழ் உலகில் அனுபவிப்பதைப் போன்ற உணர்வு, இங்கேயும் தன் வழக்கமான “நகைப்” பூச்சைப் போடுகிறார்.

எங்கள் வாழ்வியலில் புத்தகம் படிக்கவும், பாட்டுக் கேட்கவும் ஏன் இயக்கத்துக்குப் போகவும் கூட பக்கத்து வீட்டு அண்ணாவோ அக்காவோ முன்னோடியாக அல்லது வழிகாட்டியாக இருந்திருக்க வேண்டும். அதிலும் இந்தப் பாட்டுக் கேட்டல் ஒரு குரு சீட மரபில் கடத்தப்படுவது. இங்கேயும் அதையே எழுத்தாளர் தன்னுடைய அனுபவ வெளிப்பாட்டில் பகிர்கிறார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# வாரப்பலன்

## மேடம்
குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதில் தடை, தாமதங்கள் ஏற்படக்கூடும்.

## துலாம்
பண வரவு போதுமானதாக இருக்கும். செலவுகளும் அளவாகவே காணப்படும். நண்பர்கள் உதவி செய்வார்கள். பழைய கடன்களைக் கொடுத்து முடிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும்.

## ரிஷபம்
வருமானத்துக்குக் குறைவிருக்காது. வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். கணவன் - மனைவிக்கிடையே இருந்து வந்த கருத்துவேறுபாடு மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வேலைக்கு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும்.

## விருச்சிகம்
குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே சிறுசிறு மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். ஒருவரை ஒருவர் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். பற்று வரவு விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது.

## மிதுனம்
புதிய முயற்சிகள் எதையும் வார ஆரம்பத்திலேயே தொடங்கிவிடுவது நல்லது. நீண்டநாளாக நினைத்த சுப நிகழ்ச்சி நடைபெறுவதற்கான வாய்ப்பு உண்டு. திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். புதிதாக வியாபாரம் தொடங்குவீர்கள்.

## தனுசு
காரியங்கள் பலவற்றை திட்டமிட்டு செய்தாலும், அனைத்திலும் வெற்றியை எதிர்பார்க்க முடியாது. உயரதிகாரிகளின் கோபப் பார்வைக்கு இலக்காக நேரிடும். சொந்தத் தொழிலில் பணிகள் பல வந்து சேரும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் வரும்.

## கடகம்
குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டாகும்.

## மகரம்
குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்சினைகள் நீங்கி, குதுகலம் குடிகொள்ளும். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்து, மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரர் நீங்கள் கேட்ட உதவியை செய்து தருவார். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும்.

## சிம்மம்
பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். வீண் செலவுகளும் ஏற்படாது. தந்தை வழி உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறு பாடு ஏற்படக்கூடும்.

## கும்பம்
உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையானபணவரவு உண்டு. சிலருக்கு வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்

## கன்னி
எதிர்பாராத பணவரவுக்கு சாத்தியம் உள்ளது உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும். அலுவலகத்தில் கடுமையாக உழைத்தாலும் நல்ல பெயர் கிடைக்கும் என்று சொல்லமுடியாது.

## மீனம்
பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். உஷ்ணத்தின் காரணமாக வயிறுவலி ஏற்படச் சாத்தியம் உண்டு. கணவன் - மனைவி இடையில் சமுகமான உறவு உண்டாகும்.



ஸ்கந்தபுரம் பகுதியை அயல் கிராமங்களோடு இணைக்கின்ற வீதியை புனரமைக்கும் பணி தொடங்கியது



விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கல்விப் பிரிவின் கண்காட்சி நிகழ்வு திருகோணமலை அன்பு வழி கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெற்றது.



தமிழாய்வு மைய வெளியீட்டில் உருவான அரசறிவியலாளர் மு.திருநாவுக்கரசு எழுதிய பூகோளவாதம் புதிய தேசியவாதம் நூலின் அறிமுகவிழா அண்மையில் லண்டன் அல்பேட்டன் கொமியுனிட்டி பாடசாலை அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.



பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையால் வடக்கு மகாண மர நடுகை மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.




புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் மக்கள் சந்திப்பொன்று புதுக்குடியிருப்பு - வேணாவில் பொது நோக்கு மண்டபத்தடியில் நடைபெற்றது.



காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் 631 நாட்களுக்கு மேலாக நடைபெற்று வரும் நிலையில் கடந்த புதன்கிழமை அது ஒரு கவனயீர்ப்புப் போராட்டமாக நல்லூரில் நடைபெற்றது.

# குளம் தூங்கி விட்டது!



ஒரு ஊரில் ஒரு முட்டாள் குரு தனது ஐந்து சீடர்களுடன் வசித்து வந்தார். இவர்கள் ஒரு நாள் வேறு ஊருக்குப் போக வேண்டி இருந்தது. அங்கே ஒரு குளம் இருந்ததால் அந்தக் குளத்தைக் கடந்து மறுபக்கம் செல்வது எப்படி என யோசித்தனர்.

இந்தக் குளம் முன்பு ஒருவனை விழுங்கி விட்டது. அதனால் நாம் மிகவும் கவனமாக இதனைக் கடக்க வேண்டும். நாம் குளம் தூங்கும் வரை காத்திருக்க வேண்டும் எனக் குரு கூறினார். அவர்கள் இரவாகும் வரை காத்திருந்தனர். இரவாகியதும் ஒரு சீடன் எவ்வாறு குளம் தூங்கி விட்டது எனத் தெரியும் எனக் கேட்டான். குருவும் ஒரு சீடனைக் கூப்பிட்டார். ஒரு தீப்பந்தத்தை அவனது கையில் கொடுத்தார். இதனைக் கொண்டு சென்று தண்ணீருக்குள் வைக்கவும் என்றார்.

அவனும் தீப்பந்தத்தைக் கொண்டு சென்று தண்ணீருக்கள் வைத்தான். தீப்பந்தம் "ஸ்ஸ்ஸ.." என்ற சத்தத்தடன் அணைந்தது. குளம் தூங்கவில்லை எனக் கத்திக் கொண்டே எல்லோரும் ஓட்டம் பிடித்தனர். மீண்டும் சிறிது நேரம் காவலிருந்தனர். சிறிது நேரத்தில் குரு ஒரு சீடனைக் கூப்பிட்டு அணைந்த தீப்பந்தத்தைக் கொடுத்தார். அந்தத் தீப்பந்தத்தைக் கொண்டு சென்று குளத்தில் வைக்கும் படி கூறினார்.

சீடனும் தீப்பந்தத்தை குளத்தில் வைத்தான். அதிலிருந்து எந்தச் சத்தமும் கேட்கவில்லை. எல்லோரும் குளம் தூங்கிவிட்டது என நினைத்து பயமின்றிக் குளத்தைத் தாண்டினர். குரு மிகவும் புத்திசாலி என நினைத்து சீடர்கள் அவரைப் பாராட்டினர்.




# ஆத்திசூடி அறிவுரைகள்

1. கண்டொன்று சொல்லேல்-. கண்ணாற் கண்டதற்கு மாறாகப்(பொய் சாட்சி) சொல்லாதே.
2. நப் போல் வளை -. 'ங' என்னும் எழுத்தானது எப்படி தான் பயன்னுள்ளதாக இருந்து தன் வருக்க எழுதுக்களை தழுவுகிறதோ அது போல நாமும் நம்மைச் சார்ந்தவர்களால் என்ன பயன் என்று பாராமல் அவர்களை காக்க வேண்டும்."ங" என்னும் எழுத்தை கூர்ந்து நோக்கினால், ஒருவர் வளைந்து வணக்கம் சொல்வது போல் உள்ளது விளங்கும் அதைப்போல பணிவாக பெரியவர் முன் வளைய வேண்டும் என்று ஔவை உரைத்ததாகவும் எடுத்துக்கொள்ளலாம்.
3. சனி நீராடு -.சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும்.
4. ஞயம்பட உரை- கேட்பவருக்கு இன்பம் உண்டாகும் படி இனிமையாக பேசு.
5. இடம்பட வீடு எடேல்-உன் தேவைக்கு மேல் வீட்டை பெரிதாக கட்டாதே.

# கியா கியா குருவி நான்



கியா கியா குருவி நான்
சிறகொடிந்த குருவி நான்
வாழைமரமே வாழைமரமே
கூடுகட்ட இடம் தருவாயோ?
மழைகாலம் வருகிறது
கூடுகட்ட இடம் தருவாயோ?

இடம் தரமாட்டேன் குருவியே
இடம் தரமாட்டேன்

கியா கியா குருவி நான்
சிறகொடிந்த குருவி நான்
பலாமரமே பலாமரமே
கூடுகட்ட இடம் தருவாயோ?
மழைகாலம் வருகிறது
கூடுகட்ட இடம் தருவாயோ?

இடம் தரமாட்டேன் குருவியே
இடம் தரமாட்டேன்

.கியா கியா குருவி நான்
சிறகொடிந்த குருவி நான்
ஆலமரமே ஆலமரமே
கூடுகட்ட இடம் தருவாயோ?
மழைகாலம் வருகிறது
கூடுகட்ட இடம் தருவாயோ?

இடம் தருகிறேன் குருவியே
நான் இடம் தருகிறேன்.

# பழமொழிகள் தரும் செய்தி

1. அஞ்சும் மூன்றும் உண்டானால், அறியாப் பெண்ணும் சமைக்கும்
   மிளகு, உப்பு, கடுகு, சீரகம்,புளி என்பதே அந்த ஐந்து. நீர், நெருப்பு, எரிபொருள் என்பது மூன்றைக் குறிப்பது.
2. கஞ்சி கண்ட இடம் கைலாசம். சோறு கண்ட இடம் சொர்க்கம்
   உடலை வருத்தி உழைக்க விரும்பாமல், இலவசமாக உணவு கிடைத்து விட்டால் அதுவே சொர்க்கம் என்பவர்கள் சோம்பேறிகள்.
3. குமரிக்கு ஒரு பிள்ளை , கோடிக்கு ஒரு வெள்ளை
   ஓர் இளம் பெண் ஒரு பிள்ளை பெற்றுத் தாயாகி விட்டால் அதன் பின்பு தாய் என்றாகி விடுவாள். ஒரு புதிய ஆடையும் ஒரு தடவை கழுவிவிட்டால் பழையதாகி விடும்.

# அறிவியல் துணுக்குகள்

1. பிளாஸ்டிக் உடைவதற்கு 500 ஆண்டுகள் ஆகின்றன.
2. உலகில் மிக கொடூரமான நில நடுக்கம் 1557ல் சீனாவில் நடந்தது. இதில் சுமார் 8 லட்சம் மக்கள் இறந்தனர்.
3. சூரியனிலிருந்து புறப்படும் ஒளி பூமியை அடைய 8 நிமிடம் 30 வினாடிகள் எடுக்கின்றது.
4. சராசரியாக ஒரு மனிதன் ஐந்து முறை சிரிக்கின்றான்.
5. ஆல்பிரட் நோபல் (நோபல் பரிசுகள் இவர் பெயரால் கொடுக்கப்படுகின்றன) 1866ஆம் ஆண்டு டைனமைட்டை கண்டுபிடித்தார்.



# கற்போம் தமிழ்

## ரகர றகர வேறுபாடு

சொல்லில் றகர மெய்யும், ரகர மெய்யும் எவ்வாறு வரும், எவ்வாறு வராது என்று அறிதற்கு, கீழவரும் குறிப்புகள் உதவியாகும்.

1. றகர மெய் தன் வருக்கத்தோடு (றகர வரியோடு) சேர்ந்து வரும். ரகரமெய் தன் வருக்கத்தோடு( ரகர வரியோடு) சேர்ந்து வராது.

உ+ம் : குற்றம், விற்றான், நெற்றி, புற்று

2. றகரம், னகரமெய்க்குப் பின் வரும். ரகரம் , னகரமெய்க்குப் பின் வராது.

உ+ம் : குன்றம், தின்றான், பன்றி, கன்று, கொன்றை, சான்றோர்.

3. றகரமேனும், ரகரமேனும் தமிழச்சொற்களில் முதலெழுத்தாக வருவதில்லை. ரகத்தை முதலெழுத் தாக உடைய சில வடசொற்கள் தமிழில் வந்து வழங்குவது உண்டு

உ+ம் : ரோமம், ரோஜா, ரிஷி , ராஜா




# என் கேள்விக்கென்ன பதில்?

1. பால் பதனிடும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
2. பூகம்பத்தின் தாக்கத்தை அளவிடும் கருவியின் பெயர் என்ன?
3. ஆஸ்கார் விருது எந்த துறைக்கு வழங்கப்படுகின்றது?
4. ஜப்பானில் உபயோகப்படுத்தும் நாணயத்தின் பெயர் என்ன?
5. தண்ணீர் தேசம் அல்லது மிதவை நகரம் எது ?

விடைகள்
1. லூயிஸ் பாஸ்டர் 2. ரிக்டர் 3. சினிமா
4. யென் 5. வெனிஸ்(இத்தாலி)


# தேவ சாட்சியமான பெண்கள்

இயேசுவின் வாழ்வில் மிக முக்கிய நிகழ்வு மரணத்தை அவர் வெற்றி கொண்டது. தாம் சொன்னபடியே சிலுவையில் மரித்து அடக்கம் செய்யப்பட்ட மூன்றாம் நாள் இயேசு உயிர்த்தெழுந்தார். அவ்வாறு உயிர்த்தெழுந்த பின் மகதலேனா மரியாள் என்ற பெண்ணுக்கும் 'மற்ற மரியாள்' என விவிலியம் குறிப்பிடும் ஒரு பெண்ணுக்கும் முதல் காட்சி அளிக்கிறார்.


அவரது முதன்மைச் சீடர்கள் என்று கருதப்படும் பேதுருவுக்கோ யோவானுக்கோ கூட அவர் தனது முதல் தரிசனத்தைத் அளித்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. தனது உயிர்த்தெழுதலை முதலில் காணும் வாய்ப்பைப் பெண்களுக்குத் தருவதன் மூலம் இயேசு அவர்களைக் கௌரவப்படுத்தினார்.

காட்சிதந்த இயேசு அந்தப் பெண்கள் இருவரையும் நோக்கி, 'நீங்கள் போய், என் சகோதரருக்குச் சொல்லுங்கள்' என்று அந்தப் பெண்களிடம் சொன்னார் (மத்தேயு 28:1, 5-10). நீதிமன்றத்தில் பெண்கள் சாட்சி சொன்னால் அதை யூத சட்டம் ஏற்றுக்கொள்ளாது. பெண்களை இத்தனை பாகுபாட்டுடன் நடத்திய அதே யூத இனத்தில் தோன்றியே இயேசுவே பெண்களை தேவ சாட்சிகளாய் மாற்றி ஆணுக்கு இணையானவள் பெண் என்று காட்டுகிறார்.

நாம் நமது தாயை, சகோதரியை, மனைவியை, மகளை, தோழியை, சக பெண்களை எப்படிப் பார்க்கிறோம்? இதுவரை இது குறித்து சிந்திக்கா விட்டால், இனி சிந்திக்கவும் செயற்படவும் இதை ஒரு வாய்ப்பாகக் கருதுங்கள். இயல்பாகவே நீங்கள் பெண்களை மதிப்பவர் எனில் நீங்கள் இறைவனின் கரங்களில் பத்திரமாய் இருப்பவர்.



# சௌபாக்கியங்கள் அருளும் சோமவார விரதம்



மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்றார் கிருஷ்ண பரமாத்மா. சிவபெருமான் மாதங்களில் கார்த்திகையாக இருக்கிறார் என்பது ஒரு சிலருக்கே தெரியும். ஆம்! கார்த்திகை மாதத்தில் பௌர்ணமி, இறைவன் ஜோதி வடிவாகத் தோன்றிய நாளாக வருகிறது. மனிதனுடைய உடலில் ஆறு மாதங்கள் சேரும் கழிவுகளை நீக்கி சுத்தமடையச் செய்ய கார்த்திகை மாதத்திலிருந்து தை மாதம் வரை மூன்று மாதங்கள் புனித நீராடலும் விரதங்களும் தொடங்குகின்றன.

சோமன் என்றால் சந்திரனைக் குறிக்கும். ஒவ்வொரு திங்கட்கிழமையும் சோம வாரம் என்றே அழைக்கப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் வரும் திங்கட்கிழமை அன்று சிவபெருமானைக் குறித்து விரதம் இருந்து பரமனை வழிபட வேண்டும். இதன் சிறப்பைச் சிவபெருமானே பார்வதி தேவிக்குச் சொல்லி இருக்கிறார். இந்த விரதத்தைப் போன்று வேறு எந்த விரதத்திலும் சிவபெருமான் திருப்தி அடைய மாட்டார் என்பது ஐதீகம்.

இந்த விரதத்தைக் கார்த்திகை மாத முதல் சோம வாரத்தில் தொடங்கிக் கடைசி சோம வாரத்தன்று முடிக்க வேண்டும்.

விரத நாளன்று காலையில் புனித நீராடி, தினசரிக் கடமைகளை முடித்த பிறகு வேதியனை மனைவியோடு அழைக்க வேண்டும். அவர்களைப் பார்வதி, பரமேஸ்வனாகப் பாவனை செய்து முடிந்த அளவு தானம் செய்ய வேண்டும். சூரியன் மறைவதற்கு முன் ஆறு வேளை உணவு எடுத்துக்கொண்டு சிவபெருமானை வணங்க வேண்டும்.

சிவபூஜை பழக்கத்தில் இல்லாதவர்கள், அருகில் உள்ள சிவாலயத்திற்குச் சென்று பஞ்சாமிர்தத்தால் அபிஷேகமும், அர்ச்சனைகளும் செய்ய வேண்டும். பிராமண போசனம் நடத்தி, சில அடியார்களுக்கும், அங்குள்ள பக்தர்களுக்கும் அன்னம் பிரசாதமாக வழங்க வேண்டும். பிறகு வீடு வந்து ஒரு வேளை மட்டும் உணவு உட்கொள்ள வேண்டும்.

சோமவார தினத்தில் காலையில் வீட்டில் தீபம் ஏற்றிச் சிவனைக் குறித்து விரதம் இருந்து ஒருவேளை சிறிதளவே உணவு எடுத்து, இரவில் உறங்கி மறுநாள் நீராடி விரதத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். இப்படியாக விரதம் செய்பவர்கள் கயிலை மலையானின் அருள் பெற்று நலம் சேர்ப்பர்.

# மரணமில்லாப் பெருவாழ்வு



"தொழுகை... தொழுகை... தொழுகை... பணியாட்கள்... பணியாட்கள்... பணியாட்கள்... பெண்கள்... பெண்கள்... பெண்கள்..." இந்த முணு முணுப்பினூடே... நேரம் செல்லச் செல்ல கனக்க ஆரம்பித்தது அந்தப் பொன்னுடல்.

மூச்சுவிட மிகவும் சிரமப்பட்ட அந்நிலையிலும், தொழுகையை அதற்குரிய பேணுதலுடன் நிறைவேற்றும்படியும், பணியாட்களின் உரிமைகளை நிறைவேற்றும்படியும், பெண்ணுரிமைகளை அளித்து பெண்ணினத்தைப் போற்றும்படியும் வார்த்தைகள் உதிர்ந்தன. கடைசியான அந்தத் தருணம் வரவும் செய்தது.

"உயரிய தோழனான இறைவனிடமே நான் மீள்கிறேன்!" என்று மும்முறை அசைந்த அதரங்கள் அதன்பின் அசையாமல் மௌனமாயின. பேரருள் சுமந்துவந்த கண்கள் காரிருளில் கரைந்தன.

இவ்வளவு நேரமாக தமது அருமைக் கணவரும், இறை நம்பிக்கையாளர்களின் தலைவரும், இறைவனின் திருத்தூதருமான நபிகளாரை தமது மடியில் சுமந்திருந்த அன்னை ஆயிஷாவின் விழிகள் அருவியாயின. அந்த பேரிழப்பைத் தாங்க முடியாமல் விம்மல் வெடித்துச் சிதறியது.

நொடியில், இறைவனின் திருத்தூதர் காலமான செய்தி மதீனா பெருநகரெங்கும் எரிதழலாய் பற்றிப் படர்ந்தது. நபிகள் காலமான தகவல் நபிகளின் தோழர் அபூபக்கருக்கும் எட்டுகிறது. அவர், அதை உறுதிப்படுத்த நேராகத் தனது அருமை மகள் ஆயிஷாவின் இல்லத்தை நோக்கி விரைந்தார். நபிகளாரின் பொன் முகத்தை இமைக்காமல் நோக்கினார். இறைதூதரின் வரலாறு நெடுக நிறைந்திருந்த சம்பவங்கள் எல்லாம் அவர் மனதில் தோன்றித் தோன்றி மறையலாயின. அந்த பேரிழப்பை எப்படி உள்வாங்குவதென்று ஒரு கணம் தடுமாறினார்.

"உயிருடனிருந்தபோது பூரண நிலவாய் தகதகத்தது போலவே, இப்போதும் நான் உங்களைக் காண்கிறேன் என்தருமைத் தோழரே! இறைவனின் திருத்தூதரே, "தாங்கள் மரணமுற்றது உண்மைதான்..!" - என்று கனத்த இதயத்துடன் கூறியவாறு நபிகளாரின் நெற்றியில் முத்தமிட்டார். துணியால் நபிகளாரின் திருமுகத்தைப் போர்த்திவிட்டு வீட்டைவிட்டு வெளியே வந்தார்.

அங்கு கூடியிருந்த மக்களிடம் சொன்னார்: "தோழர், தோழியரே! அருமைச் சகோதர, சகோதரிகளே! நன்றாகக் கேளுங்கள் இறைவனின் திருத்தூதரை வணங்குபவர்கள் உங்களில் யாராவது இருந்தால் அவர்கள் அறிந்து கொள்ளட்டும். நபிகளார் இறந்து விட்டார். மாறாக, இறைவனை வணங்குபவர்கள் இருந்தால் அவர்கள் அறிந்து கொள்ளட்டும். இறைவன் பிறப்பு, இறப்பு அற்றவன். அவன் மரணமில்லா நித்திய ஜீவன்..!"

# இழந்துபோன சொர்க்கம்

ஆசிரியர் குறிப்பு: இக்கட்டுரை நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக எழுதப்பட்டது.

■ கலாநிதி அசங்க வெலிகல



2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று ஜனாதிபதி செயலகத்திலிருந்து மூன்று அதிரடியான அறிக்கைகள் வெளியாகின.

1. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை விட்டு வெளியேறியமை,
2. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டமை,
3. அரசியலமைப்புச் சட்டத்தின் 42 (4) ஆவது பிரிவிற்கமைய ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார் என மைத்திரிபால சிறிசேன எழுத்து மூலம் அவருக்கு தெரியப்படுத்தியமை ஆகியனவையாகும்.

இந்த நடவடிக்கை சட்டபூர்வமானதா? இல்லையா மற்றும் இது தொடர்பாக அரசியலமைப்புச் சட்டம் என்ன கூறுகின்றது என்பதன் தெளிவு பற்றிய விவாதங்கள் ஒருபுறமிருக்க, இந்த நடவடிக்கை நாடாளுமன்றத்தின் ஆலோசனை பெறப்படாமல் முற்றிலும் இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட முறை, பிரதமருக்கோ அமைச்சரவைக்கோ முன்னறிவித்தல் அல்லது ஒரு சிறு கால அவகாசம் எதுவும் கொடுக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டமை, ஒரு வெள்ளிக்கிழமை அன்று மாலை நேரம் அதிரடியாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டு நாட்டிலே அதிர்வலைகளை ஏற்படுத்தியமை போன்ற நடவடிக்கையின் நோக்கங்கள் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளன.

ஜனநாயகத்தில் அரசாங்கத்தை மாற்றுவதற்கான வழிமுறையிதுவல்ல என்பதை இந்த முழுமையான சூழ்நிலைகள் வெளிப்படுத்துகின்றன. மாறாக ஒரு அரசியலமைப்பு சதியையே இது காட்டுகின்றது. இது ஒரு அரசியல் நெருக்கடியை நோக்கித்தான் பெரும்பாலும் நகரும். இந்த நடவடிக்கை ஒரு அரசியல் யாப்பிற்கு முரணான செயல். ஏனெனில், பதவியில் இருக்கும் பிரதமர் புதிய பிரதமர் நியமிக்கப்பட முன்னர் சட்டபூர்வமாக பதவி விலகவில்லை. இந்த நிலை மிகப்பெரிய அரசியல் நெருக்கடியை எதிர்காலத்தில் ஏற்படுத்தும். ஏனெனில், தாம்தான் பிரதமர் என்று இருவர் தெரிவித்துள்ளதுடன் அவர்களுடன் சார்புடைய கட்சியினர் மத்தியில் அதிகாரத்துக்கான மற்றும் சட்ட அங்கீகாரத்துக்குமான போட்டியும் தற்போது ஏற்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரில் ஒருவர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்து அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டால் மாத்திரமே இப்பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும். இந்த நடவடிக்கை இந்நாட்டில் எவ்வாறான நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை காலமே பதில் சொல்லவேண்டும்.

பத்தொன்பதாம் அரசியல் யாப்பு திருத்தத்தின்படி பிரதமர் மரணித்தாலோ, பதவிவிலகினாலோ, நாடாளுமன்ற உறுப்பினராக செயற்படுவதிலிருந்து விலகினாலோ அல்லது வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பு, நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது மேற்கொள்ளப்படும் வாக்கெடுப்பு (பிரிவு 46 (2) மற்றும் 48) ஆகிய சந்தர்ப்பங்களில் அரசு தோற்கடிக்கப்பட்டாலோ பிரதமர் ஒருவர் தனது பதவியை இழக்கலாம். பத்தொன்பதாம் அரசியல் யாப்பு திருத்தத்தின்படி பிரதமர் ஒருவர் மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலேயே தனது பதவியை இழக்கலாம் என்று கூறப்பட்டிருப்பதனாலும், முன்னர் பிரதமரை பதவி விலக்க ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரத்தை இந்த திருத்தம் இல்லாமல் செய்ததாலும் மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை தவிர்த்து வேறு எந்த முறையிலும் பிரதமரைபதவியிலிருந்து நீக்க முடியாது. குறிப்பாக, மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பிரதமர் தனது பதவியிலிருந்து விலகினால் மட்டுமே ஜனாதிபதி புதிய பிரதமர் ஒருவரை நியமிக்க முடியும்.

தற்போது சேவையிலிருக்கும் பிரதமர் மேற்குறிப்பிட்ட எந்த ஒரு வகையிலும் தனது பதவியை இழக்கவோ இராஜினாமா செய்யவோ இல்லை. எனினும், ஜனாதிபதி பிரிவு 42(4) இல் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கமைய ஒரு பிரதமரை நியமித்துள்ளார். மேற்குறிப்பிட்ட அந்தப் பிரிவின் படி, நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பிரதமராக நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. இந்த பிரிவில் கூறப்பட்டுள்ளவற்றை ஜனாதிபதி அவர்கள் அவை கூறப்பட்டுள்ள விதத்திலேயே விளங்கிக்கொண்டுள்ளார். ஜனாதிபதியினுடைய கருத்தின்படி என அப்பிரிவு கூறுகையில், பிரதமராக நியமிக்கப்படுவதற்கு தகுதியான நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த அவருடைய தனிப்பட்ட மற்றும் அகநிலை கருத்தை அது குறிக்கவில்லை. மாறாக புறநிலைக் கண்ணோட்டத்தின் படியும் அரசியல் யாப்பின் கண்ணோட்டத்தின் படியும் நாடாளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெறக்கூடிய நபரை தெரிவு செய்யும் அதிகாரத்தையே குறிப்பிட்ட அந்தப் பிரிவு தெரிவிக்கின்றது. இது பொதுவாக, ஆயினும் எந்நேரமும் அல்ல, நாடாளுமன்றத்தின் மிக பெரிய கட்சியின் தலைவராகவே இருப்பார்.

இந்த ஆண்டின் முற்பகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது கணிசமான வாக்கு வித்தியாசத்தில் அவர் வெற்றிபெற்றார். அதன் பின்னரோ அல்லது ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட முன்னரோ இவ்வாறான வாக்கெடுப்பு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகையால், நம்பிக்கையில்லா பிரேரணையில் தோல்வி காணாத விக்கிரமசிங்கவை விலக்கி இன்னொருவரை பிரதமராக ஜனாதிபதியினால் அரசியல் யாப்புக்கு அமைவாக நியமிக்க முடியாது.

இதேவேளை பிரிவு 42(2) ஆனது ஜனாதிபதிக்கு ஒரு பிரதமரை நியமித்தற்கான அதிகாரத்தைப்பற்றி தான் கூறுகிறதே தவிர, ஜனாதிபதியால் பிரதமரை விலக்குவதற்கான அதிகாரத்தைப்பற்றி குறிப்பிடவில்லை.

2015இற்கு முற்பட்ட காலப் பகுதியில் ஜனாதிபதிக்கு பிரதமர் ஒருவரை எவ்வாறு நியமிக்க அதிகாரம் இருந்ததோ அவ்வாறே பதிவியிலிருந்து அகற்ற அதிகாரம் உண்டு எனக் கருதினாலும், பத்தொன்பதாம் அரசியல் யாப்பு திருத்தமானது பிரதமர் பதவியிலிருந்து விலகுவதற்கான அல்லது விலக்குவதற்கான சந்தர்ப்பங்களை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த நடைமுறைகளை பின்பற்றத் தவறியதனால் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் சட்டவிரோதமானதும் அரசியல் யாப்புக்கு முரணானதுமாகும்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு காரணமாகக் கருதக்கூடிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் விலகல் மூலம் ராஜபக்ஷவுக்கு சாதகமாக மாறுபட்டிருந்தால், சிறிசேனவும் ராஜபக்ஷவும் அரசியல் யாப்புக்கு அமைவாக பிரதமரை நாடாளுமன்றத்தில் வைத்து ஏன் தோற்கடிக்க முன்வரவில்லை?

ராஜபக்ஷ தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கத் தவறினால் இந்த நெருக்கடி மேலும் தொடரும். எனினும், அவரும் சிறிசேனவும் அரசியல் யாப்புக்கும் நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு அமைவாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு முன்னர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, நாட்டை ஆச்சரியத்தில் ஆழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், வார இறுதி நாட்களில் அரச நிறுவனங்கள், காவல் துறை மற்றும் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும், இந்த நடவடிக்கையின் சவால் நிறைந்த தன்மை காரணமாக நாட்டின் நீதி மன்றங்கள் இதில் தலையிட மாட்டாது என்ற காரணத்தினால், இந்த நடவடிக்கை தொடர்பான சட்டவிரோதத்தன்மைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது எனவும் இவர்கள் சரியாக ஊகித்துள்ளனர்.

ராஜபக்ஷவைப் பொறுத்த வரையில் இவ்வாறான ஒரு நடத்தை மிகவும் சாதாரணமானது. மேலும், ஒரு ஸ்திரமற்ற குடியரசின் ஜனரஞ்சகமான ஜனாதிபதி என்பதனை அவர் வெளிக்காட்டுவதில் தயக்கம் காட்டவும் இல்லை. எனினும், இவ்வாறான ஒரு நிலையை மாற்றுவதற்காகவே 2015 மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயினும், உயர்ந்த கொள்கைகளைக் கொண்டு நாட்டை சீராக்கும் வீரராக காணப்பட்டார். தற்போது கீழ்த்தரமான அரசியலில் ஈடுபட்டு வெறுக்கத்தக்க நிலைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இறக்கும்போது என்ன நினைத்தாய் அமல்?



பட்டினியைப் பரிசளித்து அமல் ஹூசைனின் உயிர் பறிக்கப்பட்டபோது, அவளது அந்த நிலைகுத்திய கண்களைப் பார்க்கும் தைரியம் யாருக்கும் இல்லை. தான் இறந்த அந்தக் கடைசி நொடியில் என்ன நினைத்திருப்பாள் அமல்? எதற்காகத், தான் இறக்கிறோம் என்று தெரியாமலேயே தனது உயிரை விட்டிருக்கிறாள் அமல். அமெரிக்கா, அரேபியா உட்பட உலகின் மொத்த ஏகாதிபத்தியத்தையும் குற்றவுணர்ச்சி கொள்ள வைக்கும் குறியீடாக மாறியிருக்கிறாள் எலும்புக்கூடாய் உடலுருக்கி இறந்த அமல்!

ஒரு காலத்தில் உலகச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் புராதன நாடாக இருந்த ஏமன் இன்று சூடான், சோமாலியாவுக்கு அடுத்தபடியாக மிகக்கொடிய பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாடு என்று ஐ.நாவால் அறிவிக்கப் படக்கூடிய பரிதாப நிலையில் உள்ளது. 2004இல் மதகுரு ஹூசைன் அல் ஹௌதி தலைமையின் கீழ் செயற்பட்ட ஷியா பிரிவினர், ஆட்சியில் இருந்த சன்னி பிரிவின் தலைமையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தபோது, அது ஏமனை இந்த அளவுக்குப் பாதிக்கும் என்று யாரும் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை.

2017 இல் அரேபியா தலைமையிலான கூட்டணி, ஹௌதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக உள்நாட்டுப் போரை மேலும் தீவிரப்படுத்தியது. அரேபியாவின் தலைமையிலான கூட்டுப்படைகள் வான் மற்றும் கடல் வழிகளைக் கட்டுப்படுத்தியதால், உணவுப் பொருள்கள் கொண்டுசெல்லும் அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டன. இதனால், கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அரச உத்தியோகத்தர்கள் முதல் கூலித்தொழிலாளர்கள் வரை ஒருவேளை உணவுக்காக வீதியில் அலைகின்றனர்.

உணவுப் பஞ்சத்தால் குழந்தைகள் கண் முன் இறப்பதைத் தடுக்க முடியாமல் பெற்றோர்கள் பரிதவிக்கின்றனர். இருபது லட்சம் மக்கள் தங்கள் வீடுகளை இழந்து பாதுகாப்பு மையங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். 'எங்களிடம் ஆயுதம் இல்லை. இங்கு ராணுவத்தளம் இல்லை. எதிர்க்கும் சக்தியும் இல்லை. ஆனாலும், கூட்டுப்படை எங்கள் மீது ஏன் தாக்குதல் தொடுக்கிறார்கள் என்று புரியவில்லை" என்று ஏமன் மக்கள் கதறியது எவர் காதுகளையும் எட்டவில்லை.

இதற்கெல்லாம் உச்சமாக அங்கு மருத்துவ உதவி கிடைக்காத காரணத்தால், ஏழே வயதான சிறுமி அமல் ஹூசைன் உயிரிழந்த சம்பவம் உலகையே உறைய வைத்திருக்கிறது. ஏமன் நாட்டில் தொடரும் உள்நாட்டுப் போரின் கொடூர விளைவுகள், உலக நாடுகளின் கவனத்தைக் கவர்ந்ததற்கு முக்கியக் காரணம் சிறுமி அமல் ஹூசைன்தான். நான்கு மைல் தொலைவில் மருத்துவமனை இருந்தும், 'என் மகளை மேலதிக சிகிச்சைக்காக அழைத்துச் செல்ல என்னிடம் பணம் இல்லை. அகதிகள் முகாமில் ஒரு வாரமாக கஷ்டப்பட்டு என் கண் எதிரிலேயே அவள் உயிர்விட்டாள்" என்று சிறுமியின் தாயார் கதறியது உலக மக்களை நிலைகுலைய வைத்துள்ளது.

ஏமன் - அரேபிய எல்லையில் உள்ள சாடா என்ற பகுதியில் வாழ்ந்த அமலின் குடும்பம் குண்டு வீச்சிலிருந்து தப்பிக்க, பக்கத்து ஊரிலுள்ள அகதிகள் முகாமில் தஞ்சம் அடைந்தது. ஒருவேளை உணவுகூட வாங்க முடியாமல் அக்குடும்பம் தவித்ததால் பட்டினியால் துவண்ட அமல், ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டாள். முதலுதவிக்காக அகதிகள் முகாமில் உள்ள மருத்துவ முகாமில் சேர்க்கப்பட்டாள். அங்கு மருந்துகள் முடிவடைந்து விடவே சிகிச்சையைத் தொடர முடியவில்லை. முகாம் மருத்துவர்கள் அவளை மேல் சிகிச்சைக்காக அருகில் இருக்கும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல அறிவுறுத்தினர்.

ஆனால், அந்த ஏழைத் தாயால் மருத்துவமனைக்கு அமலை அழைத்துச்செல்ல முடியவில்லை.

அமலைப்போல, கிட்டத்தட்ட 40,000 குழந்தைகள் ஏமன் நாட்டில் சாவின் விளிம்பில் இருக்கிறார்கள். லட்சக்கணக்கான குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டு, மருத்துவச் சேவைக்காக உயிர்தேக்கிக் காத்திருக்கிறார்கள். '2015 ஆம் ஆண்டில் ஏமனில் தீவிரமடைந்த உள்நாட்டுப் போரால், இன்றுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் ஆறாயிரத்துக்கு அதிகமான குழந்தைகள் கொல்லப்பட்டனர்" என ஐ.நா. அறிக்கை தெரிவிக்கிறது.

"பட்டினியால் 1.3 கோடி மக்கள் அல்லலுறுகின்றனர். ஐந்து வயதுக்குட்பட்ட 18 லட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு உள்ளது. மருத்துவ சேவை முற்றிலும் செயலிழந்துவிட்டது" என யுனிசெவ் இயக்குநர் கீத் கெப்ளர் சமீபத்தில் தன் கவலையை வெளிப்படுத்தியுள்ளார். ஏமனில் ஒவ்வோர் ஆண்டும் 30,000 குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைவால் இறக்கின்றன.

ஏமனில் அமைதியை நிலைநாட்ட ஐ.நா. சபை எடுத்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு அரேபியா - அமெரிக்கப் பொருளாதார வர்த்தக உறவுகள் பலப்பட்டதால் அரேபியாவின் எல்லைமீறல்கள் கண்டுகொள்ளப்படவில்லை.

சவுதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் கஷோகி கொல்லப்பட்ட விவகாரத்தில் அமெரிக்க எதிர்க்கட்சிகளின் நெருக்கடிகள், அமெரிக்காவை அரேபியா மீதான நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வைத்துள்ளன. எதிர்க்கட்சிகளைச் சமாளிக்கவும் இடைத்தேர்தல் முடிவுகளை நினைவில் கொண்டும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், 'சவுதி தலைமையிலான கூட்டணி, விமானத் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்" என்று அழைப்பு விடுத்துள்ளார்.

"ஒருமாதத்துக்குள் நடைபெற உள்ள ஐ.நா. தலைமையிலான சமாதானப் பேச்சில் அனைத்து நாடுகளும் பங்கேற்க வேண்டும்" என அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜேம்ஸ் என்.மாட்டிஸ் கேட்டுக்கொண்டுள்ளார். "உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவருவது மட்டும் போதாது. மக்களை மையமாகக் கொண்ட அரசாங்க அமைப்பை உருவாக்குவதும் முக்கியம்" என்கிறார் ஏமனுக்கான ஐ.நாவின் சிறப்புத் தூதுவர் மார்ட்டின் க்ரிஃபித்ஸ்.


தற்போது சவுதி அரேபியா, ஹொடேய்டா துறைமுக நகரத்தைக் கைப்பற்ற பத்தாயிரம் படையினரை அனுப்பியுள்ளது. சமீப வான்வழித் தாக்குதல்களில் இருபது ஹௌதிப் போராளிகள் கொல்லப்பட்டனர். ஹொடேய்டா துறைமுகம் வழியாகத்தான் ஏமனின் 70 வீதமான பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த வழியும் அடைக்கப்பட்டால் உணவுப் பற்றாக்குறை அதிமாகும்.

அமைதியை நிலைநாட்டுவதில் ஏற்படும் காலதாமதம், குழந்தைகளின் உயிரிழப்புகளை அதிகரிக்கத்தான் செய்யும். அமெரிக்காவின் பொருளாதாரத் தடையைச் சந்திக்கும் ஈரான், எவ்வளவு தூரம் இதற்கு ஒத்துழைக்கும் என்பதும் தெரியாது. ட்ரம்பின் போர் நிறுத்த அழைப்பு என்பது ஏமனின் அமைதிக்காக அமெரிக்கா முன்னெடுக்கும் ஓர் அர்த்தமுள்ள நடவடிக்கையாக இருக்குமா அல்லது முன்னாள் ஜனாதிபதி ஒபாமா விமர்சித்ததைப்போல இதுவும் அரசியல் நாடகமா என்று சந்தேகிக்கின்றனர் நிபுணர்கள்.

அமலின் உயிரிழப்பு, ஏமனின் கடைசி உயிரிழப்பாக இருக்க வேண்டும்!

# பகுத்தறிவு

■ சிதம்பரபத்தினி



பேராதனை பல்கலைக்கழகத் திலிருந்து இராமநாதன் விடுதியை நோக்கிச் சென்றால் சற்றுத் தூரத்திற்கப்பால், ஒரு வளைவு "வாழ்க்கையில் நிதானமாக - விழித்து நடவுங்கள் இல்லையேல் வழுக்கி விழவேண்டி நேரிடும்" என்று போவோரையும் வருவோ ரையும் எச்சரிப்பது போன்ற அமைந்த ஒரு வளைவு - ஒரு தெளிவு - ஒரு பள்ளம் அதன் வலப்புறத்தே நோக்கின் கண்கவர் கவின்பூங்கா. வாழ்க்கையே ஒரு ஓட்டப்பந்தயந்தான் என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டே சலசலக்கும் சிற்றோடை. ஏழில்மிகு மலர்கள் பூத்துக்குலுங்கும் பூச்செடிகள், இனிய நறுமணம், இத்தனை அலங்காரம் செய்தும் எங்களின் இயற்கை அழகிற்கு ஈடாவீர்களா? என்று பெண்களை எள்ளி நகையாடுவது போன்றமைந்த வண்ண மிகு குறோட்டன்கள்.

நடுவில் - ஒரு சுனை - சிறிய வட்டமான சுனை இத்தகைய சூழ்நிலையிலும் துறவிகள் வாழமுடியும் என்பதை எடுத் துக் கூறுவன போன்ற நிமிர்ந்த - நேர்கொண்ட பார்வையை யுடைய நீருடன் ஒட்டியும் ஒட்டாமலிருக்கின்ற தாமரை இலைகள், கண் விழித்த கமலங்கள், இவ்வளவும் நிறைந்த அந்தப் பூங்காவிலே - தம்மை மறந்து, உலகையும் மறந்து, இன்பப் போதையில் மூழ்கி மௌன பரிபாஷையில் சொல்லுக்கடங்காத ஆயிரம் வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந்தனர் காதலர் இருவர்.

அவர்கள் யார் என்று அறிய வேண்டாமா? பூரண பருவ வளர்ச்சியடைந்த காளையொரு வன் மதுவுண்ட வண்டுபோல் இன்பப் போதையில் கிறங்கிக் கொண்டு நிற்பது போன்று மதர்த்து வளர்ந்து நின்றது ஒரு மரம். அதுதான் அந்தக் காதலன். ஆதவனின் ஒளிக்கிரணங்கள் பட்டு ஒளிவீசிய அதன் மஞ்சள் வர்ணமலர்கள் நெருங்கிவரும் தன் காதலியை அரவணைக்கும் ஆவலுடன் புன்னகை செய்து வரவேற்பது போன்று பிரகாசித்துக் கொண்டிருந்தன. காதலனை மகிழ்விக்கத் தலையில் பூச்சூடி ஒல்லி ஒசிந்து ஒயிலாகத் தவழ்ந்து வந்து மெல்ல அவனை அம்மரத்தைத் தழுவிக்கொண்டாள். அந்த நங்கை - அந்தக்கொடி - அதுதான் அந்தக்காதலி பெண்களிடத்து இயல்பாகவேயுள்ள நாணத்தை வெளிப்படுத்துவது போன்று அதனிடத்தே மலர்ந்த மலர்கள் குங்குமச் சிரிப்பாகத் திகழ்ந்தன.

திடீரெனக் காற்று வேகமாக வீசியது. பயந்த கொடிமரத்தை இறுகத் தழுவிக்கொண்டது. எங்கிருந்தோ 'கல கல' என்ற சிரிப்பொலி தங்களைப் பார்த்துத்தான் நகைக்கிறார்களோ என்று எண்ணி நாணமடைந்த கொடி மரத்தைவிட்டு மெல்ல விலகியது. தன் காதலியை மிக நீண்ட நேரம் அணைத்திருக்க முடியவில்லையே என்று வருந்திய மரம் சிரித்தவர்களை அறிவதற்காகப் பார்வையைச் சுழற்றியது.

அங்கே கல்லாசனம் ஒன்றில் - காதலர் இருவர் ஒருவரையொருவர் அணைத்தபடி காதலின்பத்தில் மெய்மறந்திருந்தனர். மரம் மெல்லக் கொடியைத் தொட்டு 'அங்கே பார்' என்று அவர்களைக் காட்டியது. ஒரு கணந்தான், கொடி உடனேயே பார்வையைத் திருப்பிக் கொண்டது.

'ஏன் பார்வையைத் திருப்பி விட்டாய்?'

'போங்கள் அவர்களைப் பார்க்க எனக்கென்னமோ வெட்கமாயிருக்கிறது'

'வெட்கமா? ஏன்?'

'இப்படி வெட்டவெளியில்.....'

'அதெல்லாம் இங்கு சர்வ சாதாரணந்தான். உனக்குத்தான் இந்த மறைவில் கூட என்னைத் தழுவ நாணமாயிருக்கிறது'

'அப்படி இடமென்றால் நான் உங்கள் கிட்டவே வரமாட்டேன்'

'பின்னே எங்கே போய்விடுவாயாம்' என்று கூறிக்கொண்டே கொடியை மெல்லப் பற்றியது மரம்.

'சீ சும்மா விடுங்கள் யாரும் பார்க்கப்போகிறார்கள்'

'அதிருக்கட்டும். உங்களை ஒன்று கேட்கலாமா?'

'என்ன கேளேன்'

'இவர்களைப்போல் நாமும் இன்பமாயிருக்க முடியுமா?'

'அடி பைத்தியமே! இவர்கள் மாலையில் மட்டுந்தான் ஒன்றாகச் சேர்ந்திருந்து மகிழமுடியும். மற்றநேரம் பிரிந்து விடுவார்கள். நாம் இருவரும் ஒன்றாகவே இருந்து எந்நேரமும் மகிழலாமே. நீ மட்டும் மனசுவைச்சால்.......'

'அப்படியா' என்று மகிழ்ந்து கூவிய கொடி திரும்பவும் காற்று வேகமாக வீசவே மரத்தை அன்புடன் அணைத்துக் கொண்டது.

- ஒரு நாள்.

என்றுமில்லாத திருநாளாக அப்பூங்காவிலே விசும்பல் ஒலி கேட்டது. அதிசயித்தகொடி காதலர் இருந்த புறம் நோக்கிற்று. அங்கே, அந்தக் காதலி கண்ணீர்விட்டுக் கொண்டிருந்தாள். காதலன் அவளைத் தேற்றிக் கொண்டிருந்தான். வியப்படைந்த கொடி மரத்தைக் கேட்டது.

'அவள் சென்ற வருடந்தான் இங்கு படிக்க வந்தாள். அவனுக்கோ இன்றுடன் படிப்பு முடிந்துவிட்டது. அவன் அவளை விட்டுப்பிரியப் போகின்றான். காதலனைப் பிரியப் போகின்றேனே என்றுதான் அவள் அழுகிறாள்.'

'ஐயோ அப்படியானால் நீங்களும் என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிடுவீர்களா?' சிணுங்கியபடியே கோபமும் துன்பமும் பொங்கிவரக் கொடி எட்டப்போய் நின்றது. கொடியை மெல்ல அணைத்த மரம் 'என் கண்ணே! நான் உன்னை விட்டுப்பிரிவேனோ? அன்று நான் சொல்லியதை நீ அதற்குள் மறந்துவிட்டாயா?

அவர்கள் இருவரும் எங்கோ ஒரு இடத்திலிருந்து இங்கு படிக்க வந்தார்கள். வந்தபடியே பிரிந்தும் செல்கிறார்கள். நாம் இருவருமோ என்றைக்கும் ஒரே இடத்தில் இருப்பவர்கள். எம்மை யாரும் பிரிக்க முடியாது.'

'உண்மையாகவா?' என்று வியந்த கொடி மரத்தைத் தழுவி முத்தமிட்டது.

காதலர் இருவரும் தனிமையில் இனிமை கண்டனர். கொடியும் இப்பொழுது யாரையுங் கண்டு நாணமடைவதில்லை. அந்தக் காதலர்கள் இப்பொழுது இல்லையல்லவா? அன்றும், அப்படித்தான். காற்று எதுவும் வீசாமலேயே கொடி மரத்தை அன்புடன் தழுவிக் கொண்டிருந்தது. அப்பொழுது. 'கல கல' என்ற சிரிப்பில்பொலி கேட்டது. ஆச்சரியமடைந்த கொடி மீண்டும் அந்தக்காதலர்கள் தான் வந்தார்களா? அல்லது புதுக்காதலர்கள் தான் யாராவது வந்தார்களா என்று அறிய ஆவல் கொண்டது. அங்கே வரும் பெண் - அவள் முன்புவந்த அதே பெண்தான். அவள் அருகில் வருபவன்? அவன் புதியவனாக அல்லவா இருக்கிறான். ஆம். அவன் புதியவனே தான். சந்தேகமில்லை.

'இவன் புதியவன்தானே?' தனது சந்தேகம் தெளிவதற்காக மரத்தைக் கேட்டது கொடி.

'புதியவன்தான்'

'யார் அவளின் அண்ணாவா?'

'இல்லை. அவளின் காதலன்.'

'அப்படியானால் முன்பு வந்தவன்?'

'அவனும் அவள் காதலன்தான்.'

'ஒரு பெண்ணுக்கு இரண்டு காதலனா? ஆச்சரியமாயிருக்கே'

'அம்மட்டோடு இருந்தாலாகுதல் பரவாயில்லை'

'என்ன சொல்கிறீர்கள்?'

'மனிதர்களில் ஒரே ஒருவரைக் காதலித்து மணம் புரிந்தவர்கள் மிகவும் அருமையே'

'ஐயையோ! இப்படியெல்லாம் செய்வதற்கு இந்த மனிதர்களுக்கு அறிவே இல்லையா?'

'ஏன் இல்லை. எனக்கும் உனக்கும் இருக்கிற அறிவிலும் பார்க்க கடவுள் அவர்களுக்கு ஒரு அறிவைக் கூடவும் கொடுத்திருக்கிறாரே'

'அப்படியா? அது என்ன அறிவு?'

'அதுதான் பகுத்தறிவு'

'அப்படியென்றால்....'

'நல்லதையும் தீயதையும் ஆராய்ந்து - பகுத்து அறியக் கூடிய அறிவு'

'அத்தகைய பகுத்தறிவு இருந்துமா பண்பற்று நடக்கிறார்கள் இந்த மனிதர்கள்?'

'இந்த பகுத்தறிவு இருந்தபடி யால் தான் அவர்கள் கெட்டுப் போனார்கள்'

'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'

'இங்கே பார். எனக்கும் உனக்கும் பகுத்தறிவு இல்லை. அதனால் தான் நாம் வருந்தக் கூடாதென்றெண்ணிக் கடவுள் எங்களை ஒன்றாகவே படைத்து விட்டார். (18ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# கழிவறையிலும் தொலைக்காட்சி...!



ஐரோப்பிய நாடுகள் அடங்கலாக பணக்கார உதைபந்தாட்டக் கழகங்கள் நிறைய இருக்கின்றன. ஸ்பெயினின் ரியல் மட்ரிட் பெயர் பெற்ற உதைபந்தாட்டக் கழகம். உலகின் தலைசிறந்த வீரர்களை கோடி கோடியாகப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கிவிடுவார்கள். இதனால் இவர்களின் வருமானமும் ஆண்டுக்கு ஆண்டு பல கோடி டொலர்களைத் தாண்டுவதுண்டு.

மைதானத்தில் போட்டியை பார்த்து ரசிப்பவர்களுக்கு, இயற்கையின் அழைப்பு வருவதுண்டு. அப்பொழுது மலசலகூடத்துக்கு செல்லும் ஆண்களுக்கு, அங்கே ஒரு வசதி காத்திருக்கிறது. ஆண்கள் நின்றபடி சிறுநீர் கழிக்க 30 விநாடிகள் வரை செல்லும். அந்த நேர இடைவெளியில் தொலைக்காட்சி பார்க்க முடிவதே அந்த வசதி. நேரடியாக போட்டியை ஒளிபரப்பினாலும், விளம்பரங்களை ஒளிபரப்புவதே இவர்களின் யுக்தி.

நேரடியாக மைதான மோதல் ஒளிபரப்பப்பட்டாலும் விளம்பரங்கள்தான் அதிகம் என்கிறார்கள். இதை“சுவிஸ் இன்வென்ட்” என்ற ஒரு சுவிஸ் நிறுவனமே ஏற்பாடு செய்திருக்கின்றது. 30 விநாடி என்பது மிகக் குறுகிய காலமாக இருந்தாலும், அங்கே நிற்பவரது முழுக் கவனமும் ரீவியில் நிலைத்து நிற்கும் என்பதால், இதில் வருமானம் அதிகம் ஈட்டலாமெனக் கண்டறிந்துள்ளார்கள். இந்த வசதி ஸ்பெயினின் இன்னொரு கழகத்தின் விஜபி மலசலகூடத்திலும் 3000 யூரோ செலவில் நிறுவப்பட்டுள்ளதாம்.

துரத்தி துரத்தி விரட்டும் இந்த விளம்பரங்கள் கழிவறையிலுமா?



# அட்டகாசமான அட்டை அலைபேசி

நுட்பமான, தரமான பொருள் உற்பத்தியில்ஜப்பானியர்கள் கில்லாடிகள் என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஜப்பானின் மிகப்பெரிய ரெலிகொம் நிறுவனமான டொக்கமோ மிக மெல்லிய (அட்டை தடிப்பு) அலைபேசியை சந்தைக்கு விடவுள்ளது.

இதன் தடிமன் 5.3மி.மீ(0.2அங்குலம்). இந்த 4ஜீ அலைபேசி இந்த மாதம் சந்தையில் விற்பனையாகும். கடனட்டையை வைத்துக் கொள்வது போல இதை வைத்துக் கொள்ள முடியும். இதன் நிறை 47 கிராம் மாத்திரமே! தொலைபேசி அழைப்பை எடுக்கலாம், குறுஞ்செய்தி அனுப்பலாம். இணையத்தை பார்க்கலாம். ஆனால் போட்டோ மாத்திரம் எடுக்க முடியாது.

காலத்துக்குக் காலம் அளவில் பெருப்பதோடு, அதிகமான வசதிகளைக் கொண்டு அலைபெசிகள் அறிமுகமாகின்ற இத் தருணத்தில், ஒரு சின்னக் கூட்டாளியாக இணைந்து கொள்ளும் இந்த அட்டை அலைபேசி அட்டகாசமானது என்பதில் சந்தேகம் இல்லை. இதனுடைய விலை 280 டொலர்கள் என்கிறார்கள். நமது பணத்தில் சுமாராக 45,000 ரூபாய்!

# வாழும் வயதும் மாறும் நாடுகளும்



ஒரு மனிதன் சராசரியாக எவ்வளவு காலம் உயிர் வாழ்வான் என்பதில், நாமறிந்த வகையில், ஜப்பானியர்கள், சுவிஸ் நாட்டவர்கள் முன்னணியில் நிற்பவர்கள். ஆனால் தற்போதைய புதிய கணிப்பொன்று, இந்தப் பட்டியலை மாற்றி பலரையும் ஆச்சரியப்படுத்தி இருக்கின்றது. இன்று வரையில் சராசரி வயதாக 83.7 என்ற கணக்குடன் முதலிடத்தில் இருப்பது ஜப்பான். ஆனால் 2040ஆம் ஆண்டளவில் ஸ்பெயின் 85.8 வருடங்கள் என்ற கணக்குடன் முதலிடத்தைப் பிடிக்கப் போகின்றதாம்.

இப்போது இந்த நாடு நான்காம் இடத்தில் நிற்கின்றது. எனவே ஜப்பான் 2040 இல் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட, நான்காம் இடத்தில் நிற்கும் ஸ்பெயின் தலையில் ஏறப்போகின்றது. சீனா , தாய்வான், இந்தோனேசியா, துருக்கி உட்பட பல உலக நாடுகள், ஸ்பெயினைப் போல, பட்டியலில் மேலே வர, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, வடகொரியா போன்ற நாடுகள் பட்டியலில் கீழிறங்கும் என்று இந்த ஆய்வில் கண்டறிந்துள்ளார்கள்.

உதாரணத்திற்கு இப்போது 125ஆவது இடத்திலுள்ள வடகொரியா, 2040இல் 153ஆவது இடத்திற்கு இறங்கப் போகிறது. (இலக்கம் கூடினால் ஏற்றம் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள்)கனடா 17 ஆம் இடத்திலிருந்து 27 ஆம் இடத்திற்கும் நோர்வே 12 ஆம் இடத்திலிருந்து 20 ஆம் இடத்திற்கும் தள்ளப்படும். இறங்குமுகம் காணும் நாடுகளுக்கான சில உதாரணங்கள். ஆபிரிக்க நாடான நைஜீரியா 157 இலிருந்து123ஆக ஏறுமுகம் காணப்போகிறது. துருக்கி 40இலிருந்து 26ஆக மாறும். இது இன்னொரு உதாரணம்.

வயதாளிகள் தொகை குறையாது என்பது உறுதியாகின்றது

# நாய் ஆடிய வேட்டை

‘ஒரே இரவில் 600 கோழிகள் நாசம்...’ பற்றி எரியும் தீயில் எரிந்து சாம்பலாகி விட்டனவோ அல்லது பெருவெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டதோ என்று நீங்கள் குழம்புவது இயற்கை. ஆனால் நடந்த கதையோ வேறு! ஒரு கொலைகார நாய்தான் 600 கோழிகளைக் கொன்று குவித்திருக் கின்றது.





அதிலும் செல்லமாக வளர்க்கபட்ட ஹஸ்கி என்ற நாயின் திருவிளையாடல்தான் இது.

சீனாவின் அன்ஹூய் மாவட்டத்தில், கட்டவிழ்த்துக் கொண்ட ஒரு நாய் நேராக சற்றே தள்ளியிருந்த ஒரு கோழிப் பண்ணைக்குள் புகுந்து, இரவிரவாக தன் அட்டகாசத்தை நடத்தியிருக்கின்றது. வாயில் இரத்தம் சொட்டச் சொட்ட ஒரு கோழியைக் கௌவிக் கொண்டிருந்த நிலையில், பண்ணைச் சொந்தக்காரர் நாயைப் பிடித்துக் கட்டிவிட்டு, நேராக, நாயின் எஜமானிடம் போயிருக்கிறார். காரசாரமான விவாதத்தின் முடிவில், இந்த விவகாரம் பொலிஸ் நிலையம் வரை போய், முடிவாக ஒரு தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

13,000 யுவான் (சுமாராக மூன்றரை இலட்சம் ரூபாய்) இழப்பீட்டுத் தொகை பண்ணைச் சொந்தக்காரருக்குச் செலுத்த வேண்டும்.

இந்த இன நாய்கள் பொதுவாக பறவைகளை அல்லது முயல்களை வேட்டையாடுவதில் கில்லாடிகளாம்.

ஆயிரம் பேரைக் கொன்றால் அரை வைத்தியர் என்பதுண்டு. 600 கோழிகளைக் கொன்ற இந்த ஹஸ்கியை அரை வேட்டைக்காரர் பட்டியலில் சேர்க்கலாமா?



# என்னது பூமிக்கு சந்திரன் மூன்றா...!

**நம்** பூமிக்கு எத்தனை சந்திரன்? இந்தக் கேள்வியை யாராவது உங்களைப் பார்த்துக் கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள். சந்தேகமே இல்லை...! ஒன்று என்பதுதானே உங்கள் பதிலாக இருக்கும். இந்த உலகத்தில் யாரிடம் கேட்டாலும் இந்தக் கேள்விக்கு சரியாகவே பதில் சொல்வார்கள். நமது சூரிய குடும்பத்தில் வேறு சில கிரகங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட சந்திரன்கள் இருந்தாலும் நமக்கு இருப்பது சந்திரன் என்ற ஒரே ஒரு துணைக்கோள்தான். அதைச் சிறுவயதிலிருந்து பார்த்தும் வளர்ந்திருக்கிறோம்.

ஆனால்...!இனிமேல் நமது பூமிக்கு ஒரே ஒரு சந்திரன்தான் இருக்கிறது என்று நீங்கள் நினைத்துக்கொண்டிருந்தால் அந்த நினைப்பை மாற்ற வேண்டியிருக்கும் என்கிறார்கள் வானியல் ஆராய்ச்சியாளர்கள். ஒருவேளை தொடக்கத்தில் கேட்கப்பட்ட கேள்வி இனிமேல் கேட்கப்பட்டால் அதற்கு நீங்கள் பூமிக்கு மொத்தம் மூன்று சந்திரன்கள் இருக்கின்றன என்று பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

மூன்று சந்திரன் என்று கணக்கில் வைத்துக்கொண்டால் ஒன்றை ஏற்கெனவே பார்த்திருக்கிறோம் மற்ற இரண்டும் எங்கே இருக்கின்றன, இதுவரை நான் அப்படி ஒன்றைப் பார்த்ததே கிடையாதே என்ற கேள்வி உங்களுக்குள் எழக்கூடும். உங்களுக்கு மட்டுமல்ல வானியல் ஆராய்ச்சியாளர்களுக்கும் கூட பல ஆண்டுகளாக இருந்த கேள்விகள்தாம்.

நமக்குத் தெரிந்த சந்திரனைப் போல மற்ற இரண்டு சந்திரன்களும் திட உருவம் கொண்டவை அல்ல. அவை தூசிகள் அடங்கிய ஒரு மேகக் கூட்டமாகவே காணப்படுகின்றன. எனவேதான் அவற்றைத் துணைக்கோள்களாக ஏற்றுக்கொள்ளலாமா அல்லது வேண்டாமா என்ற சந்தேகம் ஆய்வாளர்களுக்கு இருந்து வந்தது. சொல்லப் போனால் பூமிக்கு மேலும் இரண்டு சந்திரன்கள் இருக்கின்றனவா என்ற விவாதம் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதற்கு முன்பே இந்த விடயம் விவாதிக்கப்பட்டு வந்தாலும் போலந்து நாட்டைச் சேர்ந்த வானியல் ஆய்வாளரான கஸிமியர்ஸ் கோர்டிலெவ்ஸ்கி (Kazimierz Kordylewski) என்பவர் *1961* ஆம் ஆண்டில் இந்தத் தூசி மேகக்கூட்டங்களை முதலில் கண்டறிந்தவர் என அறியப்படுகிறார். எனவே இந்த தூசு மேகங்கள் அவரது பெயராலேயே அழைக்கப்படுகின்றன. அவர் இந்த மேகங்களைக் கண்டுபிடித்து விட்டாலும்கூட அது பல வருடங்களாகக் கேள்விக்குள்ளாக்கப்படும் ஒன்றாகவே இருந்து வந்தது.

கஸிமியர்ஸ் கோர்டிலெவ்ஸ்கி கண்டறிந்த மேகக் கூட்டங்களை சந்திரன் என்ற வரையறைக்குள் கொண்டு வருவதற்குப் பல வருடங்களாக வானியல் அறிஞர்கள் முயன்று வந்திருக்கிறார்கள். ஆனால் அதற்கான சரியான ஆதாரங்கள் தற்போதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஹங்கேரியைச் சேர்ந்த வானியலாளர்களும் இயற்பியலாளர்களும் இறுதியாக பூமியைச் சுற்றி மேலும் இரண்டு சந்திரன்கள் இருப்பதை உறுதி செய்திருக்கிறார்கள். மேலும் அவை முழுமையாகத் தூசியால் ஆனவை எனவும் தெரிவித்திருக்கிறார்கள்.

றோயல் அஸ்ட்ரோனாமிக்கல் சொஸைட்டி (Royal Astronomical Society ) இது தொடர்பாக மேலும் பல குறிப்புகளை வெளியிட்டுள்ளது. இந்த மேகக்கூட்டங்கள் பூமியிலிருந்து சரியாக 2,50,000 மைல் தொலைவில் இருக்கின்றன. இது கிட்டத்தட்ட சந்திரனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரத்துக்குச் சமமாக இருக்கிறது. இந்த மேகக்கூட்டங்களின் அளவு பூமியை விட ஒன்பது மடங்கு பெரிதாக இருக்கிறது என்பதையும் கண்டறிந்துள்ளார்கள். இவை அவ்வளவு பெரிதாக இருந்தாலும் அவை சிறு சிறு துகள்களால் ஆனவை.

சந்திரனைப் போலவே இந்த மேகக்கூட்டத்திற்கும் சுயமாக ஒளிரும் திறன் கிடையாது. இவை சூரிய ஒளியைக் குறைந்த அளவில் பிரதிபலிக்கும் திறனைக் கொண்டிருக்கின்றன. இவற்றிலிருந்து வெளிப்படும் ஒளி மிகக் குறைவாக இருப்பதால் இவற்றை நம் கண்களால் பார்க்க முடியாது. இந்த மேகக்கூட்டங்கள் நிலையானவை, பூமியைச் சுற்றி வருகின்றன, மற்றும் ஒளியைப் பிரதிபலிக்கின்றன போன்ற காரணங்களால் இவை சந்திரன்களாக இப்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. வானியல் அறிஞர்கள் சந்திரன் என ஏற்றுக்கொண்டாலும் மக்கள் ஏற்பார்களா என்பது சந்தேகம்தான்.



# நரகாசூரன்கள் கொண்டாடிய தீபாவளித் திருநாள்

**யாழ். போதனா வைத்தியசாலையில் 1987 ஒக்ரோபர் 21 அன்று இந்திய இராணுவம் நடத்திய கோரவெறித் தாக்குதலில் 21 வைத்தியசாலைப் பணியாளர்கள் உட்பட 68 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தை நேரில் பார்த்தவர் - பாதிக்கப்பட்டவர் கீற்று இணையத்தில் எழுதிய கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.**

அபிஷேகா

(கடந்த வாரத் தொடர்ச்சி)

அம்மா, அப்பாவையும் மற்றைய இரு தம்பிகளின் பெயரையும் கூறிக் கதறி அழுது கொண்டே வந்தார். சிறிது நேரத்தில் பிரியாவையும் நோயாளர் விடுதிக்கு கொண்டு வந்து சிகிச்சை கொடுத்தார்கள். அப்பகுதியில் உயிருடன் இருந்த அனைவரும் வந்து விட்டனர், ஏனையோர் இறந்துவிட்டார்கள் என சொன்னார்கள். அப்பாவும் இரண்டு தம்பிகளும் வரவில்லை.

அப்போது அலுவலக அறையில் இருந்து காயப்பட்டு வந்த ஊழியர் ஒருவரிடம் அப்பா எங்கே என்று கேட்டபோது, 'கடைசித்தம்பிக்கு காயம். அவருக்கு நிறைய இரத்தம் போய் தண்ணி கேட்டுக் கொண்டிருந்தான். அப்பா கொஞ் சம் பொறுத்துக் கொள்ளப்பு எண்டு சொன்னார். ஆனால் அவனால் அதைத் தாங்க முடியேல்லை சின்னப்பிள்ளை தானே, இரத்தம் அதிகமா வெளியேறிக் கொண்டிருந்ததால் தாகத்தை அடக்க முடியாமல் மீண்டும் தம்பி தண்ணியை கேக்க, அப்பா மேசையில் இருந்த தண்ணியை எடுத்துக் குடுக்க மெதுவாக எழும்பினவர். அப்ப யன்னல் பக்கமாக இருந்து சுடப்பட்டதில் அப்பிடியே விழுந்தவர்தான். அவற்றை சத்தம் அதுக்குப் பிறகு கேக்கவே இல்லை, அப்பதான் எனக்கும் சூடுபட்டது, வரக்குள்ளதான் பாத்தன் அப்பா இறந்திருந்தார். நான் மற்றத் தம்பியைக் காணவில்லை, காயப்பட்ட தம்பி மயங்கிக் கிடந்தான், என்னால தூக்கிவர ஏலாமல் போயிட்டுது" என்றார். இரவு வேளை இடையிடையே கேட்ட வெடிச்சத்தத்தில் ஒன்று என் அப்பாவையும் பலிகொண்ட வேட்டொலி என்பது புரிந்தது. மரண வீட்டு ஓலங்கள் அந்த நோயாளர் விடுதியில் பரவியிருந்தது. அப்பா இறந்துவிட்டார். காயமடைந்தவர்களைக் கொண்டு வந்த ஊழியர்களும் அங்கு இனியாரும் உயிருடன் இல்லை என்றனர். மேலும் அந்த கட்டிடப்பகுதிக்கும் அப்பாலும் பலரது உடல்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள்.

தம்பிகள் இருவருக்கும் என்ன நடந்தது என்பது புரியவில்லை. அலுவலக அறையிலிருந்து ஒவ்வொருவரிடமும் விசாரித் தேன். எங்கும் சரியான பதி லில்லை. இரவு வந்துவிட்டது. அப்போதுதான், இறந்தவர்களின் உறவினர்கள் இருந்தால் அங்கு சென்று சடலங்களை இனங்காணுமாறு இந்திய இராணுவத்தினர் சொன்னார்கள். பதைபதைப்புடன் அங்கு சென்றோம்.

கும்மிருட்டு, ஆங்காங்கு சடலங்கள், அப்பா இருந்த அலுவலகத்திற்குச் சென்று, டோச் வெளிச்சத்தில் தேடிப் பார்த்தபோது அப்பாவின் உடல் குப்புற கிடந்தது. அப்பா படுத்திருக்கிற மாதிரியே கிடக்கிறார் என அம்மா கத்தியழுதார். மெதுவாகத் தொட்டுத் திருப்பினேன். நெத்தியில் குண்டுபட்டு முகம் வீங்கியிருந்தது. நாக்கை பற்களால் கடித்தபடி இருந்தார். இறந்து போயிருந்த அவரின் சடலத்தின் மேல் தலையை அடித்து அம்மா அழுதார். அழுது கொண்டே தம்பிகள் எங்கேயென்று கேட்டுக் கதறினார். கடைசித்தம்பி காயப்பட்டிருந்ததாகச் சொன்ன இடத்தைப் பார்த்தேன். அதில் அவனைக் காணவில்லை, அவ்விடத்தில் உடலை இழுத்தால் வரும் அடையாளம் போல நிலத்தில் உறைந்திருந்த இரத்தத்தில் அடையாளம் தெரிந்தது. என்ன நடந்திருக்கும் என்பதை ஊகிக்க முடியவில்லை, அம்மா தம்பிகளையும் நினைச்சு கத்தியழுதார். நான் என்ன செய்வது என்று புரியாமல் அங்கிருந்த ஏனைய சடலங்களை யும் ஒவ்வொன்றாகப் பார்க்கத் தொடங்கினேன். அப்பாவை இழந்த வலி ஒருபுறம், இது தம்பிகளின் உடல்களாக இருக்கக் கூடாது என்ற பதைபதைப்பு ஒருபுறம், ஒவ்வொரு சடலமாகப் புரட்டிக் கொண்டிருந்தேன். ஏறக்குறைய அங்கிருந்த அனைத்து சடலங்களையும் பார்த்தேன. அவர்களின் உடல்கள் அதில் இல்லை. எங்கே போனார்கள்? எனன நடந்தது? என்ற கேள்வி மனதை அழுத்தியது.

மறுநாள் விடிந்ததும் அங்கிருந்த சடலங்களை வைத்தியசாலையின் பிணவறைக்குப் பக்கத்தில் இருக்கும் பின்பக்க பாதைக்கருகில் போட்டு எரிப்பதற்கு இந்திய அமைதிப்படை தீர்மானித்தது. கட்டைகளை அடுக்கி சடலங் களை அதற்கு மேலே கொண்டு வந்து வைக்கச் சொன்னார்கள். நான் முதற்பிள்ளை என்பதால் அப்பாவுக்கு கொள்ளி வைக்க அனுமதி வாங்கித்தருமாறு கேட்டேன். வைத்தியர்கள் இருவர்



இராணுவத்துடன் கதைத்து அதற்கான அனுமதியைப் பெற்றுத் தந்தார்கள்.

அப்பாவின் சடலத்தை நோயாளர் தள்ளுவண்டியில் வைத்து வைத்தியசாலை ஊழியர்களுடன் நானும் தம்பியும் சேர்ந்து தள்ளிக்கொண்டுபோய் பிணவறைக்கு அருகில் நின்றோம். ஒவ்வொரு உடலையும் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டுவந்தனர் அதில் பலரும் தெரிந்தவர்கள். இறுதியாக ஏற்கனவே இறந்து பிணஅறையில் இருந்தவர்கள் உட்பட எண்பதிற்கும் மேற்பட்ட சடலங்களும் ஒன்றாக, குவிய லாக அடுக்கப்பட்டன. அதில் ஒரு ஓரத்தில் அப்பாவின் உடலை தனியாகக் கிடத்தி நெஞ்சாங்கட்டையை நானும் தம்பியும் வைத்தோம். இந்தியச் சிப்பாய் ஒருவன் பேப்பரில் நெருப்பைக் கொளுத்தி அப்பா விற்கு கொள்ளி வைக்கத் தந்தான். நான் அப்பாவிற்கு கொள்ளி வைத்து விட்டு திருப்பி அதைக் கொடுக்க, அப்பிணக்குவியலைச் சுற்றி நெருப்பு வைக்குமாறு கூறினான். நானும் அவ்வாறே அப்பாவுடன் சேர்த்து அனைத்து சடலங்களுக்கும் நெருப்பை வைத்துவிட்டு தம்பியையும் கூட்டிக்கொண்டு வந்தேன்.

அனைத்து சடலங்களும் ஒன்றாக எரியூட்டப்பட்டன. பின்னர், பிற்பகல் வேளை, அப்பாவுடன் வேலை செய்த ஒருவரின் துணையுடன் அஸ்தி எடுக்கச் சென்றேன். அங்கு சென்று பார்த்தபோது உடல்கள் முழுமையாக எரியவில்லை. அரைகுறையாக எரிந்த நிலையில் கருகியிருந்தன. மரங்களைக் கீழே மட்டும் போட்டு எரித்ததினால் கீழிருந்த உடல்களே எரிந்திருந்தன். மேலேயிருந்த உடல்கள் எரியாமல் இருந்ததுடன் நெஞ்சாங்கட்டை வைத்து எரிக்காததால் சில உடல்கள் நிமிர்ந்தும் இருந்தன. அப்பாவின் உடலின் அரைவாசி எரியாது இருந்தது. உடலின் மேற்பக்கத்தில் எரிந்த இடத்தில் மூன்று இடங்களில் இருந்தும் எரிந்திருந்த எலும்பை உடைத்தும் சாம்பலாக்கி எடுத்தேன். நேற்று சோறு ஊட்டிய என் அப்பாவை சாம்பலாக எடுத்து பத்திரப்படுத்தி அம்மாவிடம் கொடுத்தேன்.

**கடமையின்போது உயிர் நீத்த வைத்தியசாலை ஊழியர்கள்**

அதன்பின் வைத்தியசாலையில் ஒளிந்திருக்கக்கூடிய பல இடங் களுக்கும் சென்று தம்பிகளைத் தேடினேன். கிட்டத்தட்டப் பதினைந்து நாட்களுக்கு மேல் அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் தேடிக்கொண் டிருந்தோம். ஊரடங்குச் சட்டம் இருந்ததால் யாரும் வெளியில் நடமாட முடியவில்லை. பதினைந்து நாட்களாக இருந்த இந்தியப்படையின் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டு மக்கள் நடமாட அனுமதிக்கப்பட்டனர். அப்போதுதான் இரண்டு தம்பிகளும் நல்லூர் கோயிலில் இருக்கின்றார்கள் என அங்கிருந்து வந்த வைத்தியர் ஒருவர் கூறினார். எங்களை வைத்தியசாலையிலேயே இருக்கச் சொல்லிவிட்டு, அம்மா நல்லூர் கோயிலுக்குப் போய் அவர்கள் இருவரையும் கூட்டிக் கொண்டு வந்தார். நீண்ட நாட்களுக்குப்பிறகு தம்பிகளைச் சந்தித்தது சந்தோசத்தைக் கொடுத்தது.

கடைசித்தம்பி படுகொலைச் சம்பவம் நடந்த இடத்திற்கு வர பயமாயிருக்கு எனக் கூறி வர மறுத்துவிட்டான்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது நான்கு வருடங்களாகப் போகிற நிலையிலும் அவை நிறைவேற்றப்படவில்லை. சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு விரோதமானதெனக் கூறப்பட்டு அது விலக்கப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்ட விடயம்கூட இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. இழுத்துப் பறித்து காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அடுத்த கூட்டத் தொடர் நெருங்கும் சந்தர்ப்பத்தில் அமைக்கப்பட்டபோதும் உருப்படியான எந்த நடவடிக்கையும் இடம்பெறவில்லை.

சர்வதேச அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு எல்லா விடயங்களிலும் ஆதரவு வழங்கி வந்த போதிலும் அவர்களால் காப்பாற்றப்பட்டு வந்த இந்த ஜனநாயகத்தால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. மாறாக வடக்கு - கிழக்கில் 1000 பௌத்த விகாரைகளை அமைக்கப் போவதாக ரணில் சூளுரைத்துள்ளார். பாரம்பரிய தமிழ் வழிபாட்டுத் தலங்கள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ கொண்டு வரப்பட்டு அவற்றை பௌத்த மயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் மக்களின் காணிகள் மகாவலி அபிவிருத்தி சபையால் ஆக்கிரமிக்கப்பட்டும் சிங்கள மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

ஏற்கனவே தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறைகளுக்கு மேலதிகமாக மூன்றரை வருடங்கள் நிலவும் இந்த ஜனநாயக ஆட்சியில் மேலும், மேலும் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இவற்றுக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டங்கள் பொருட்படுத்தப்படுவதில்லை. எனவேதான் இந்த ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கான போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னின்று செயற்பட வேண்டிய தேவை உள்ளதா என்ற கேள்வி எழுகிறது.

எப்படியிருந்த போதிலும் 1969 ஆம் ஆண்டைப் போலவே இப்போதும் சிங்களத் தலைமைகள் எம்மை ஏமாற்றி விட்டன. எனவே தமிழ் மக்கள் ஒற்றுமையாக ஒரே தலைமையில் செயற்பட்டு உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் எனக் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்குக் கேட்க வரத்தான் போகிறது. ஆனால் அவர்கள் தமிழ் மக்களிடம் கோரும் ஒற்றுமையை தலைமைகள் தங்களுக்குள் தாங்களே சிதைத்துக் கொண்டு ஒருவரை ஒருவர் திட்டித் தீர்க்கின்றனர்.

## உமாஜியின்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணேஸ் வாத்தி போன்ற ஒரு ரியூஷன் மாஸ்டரையோ அல்லது சோதிலிங்கம் மாமா போல ஆமிக்காறனோட மல்லுக் கட்டிப் பாட்டுப் போடுற உறவையோ, கல்குலஸ் கணக்கைப் பாடமெடுக்கும் மன நிலை பிறழ்ந்த மனிதரையோ எப்படியோ நாம் வாழ்ந்த ஊரில் இருந்த இன்னொருவரோடு பொருத்திப் பார்க்க முடிகிறது.

வவுனியா, குருமன்காட்டில் நான் கல்வி நோக்கில் வாழ்ந்திருக்கிறேன். இனி ஒருமுறை போக வேண்டும் உமாஜி சொன்ன அந்த "குருமன்காட்டுப் பிள்ளையாரடி" ஐப் பார்க்க.

மாவிட்டபுரத்தில் பிறந்து பின் போர்க்கால இடப் பெயர்வால் மில்க்வைற் கனகராசா அவர்களின் பக்கத்தி வீடு போய் வன்னி, கொழும்பு எல்லாம் பயணித்த உமாஜியின் இடப்பெயர்வுகள் அந்தந்தக் களத்தில் நிகழ்ந்த நனவிடை தோய்தல்களாகப் பிரசவித்திருக்கின்றன.

என்னால் இந்தப் புத்தகத்தைத் தொடர்ச்சியாகப் படிக்க முடியவில்லை. காரணம், ஒவ்வொரு பகிர்வையும் படித்து முடித்த கணமே அதில் வாழ்ந்த மனிதரோடு ஐக்கியப்பட்டு விடுவேன். அதிலும் அந்த சோதிலிங்கம் மாமாவின் கதையைப் படித்து நான்கு வாரங்களாகியும் இன்னமும் அவர் நினைப்பிலேயே இருக்கிறேன். பகிர்வுகளின் முடிவில் உமாஜி முத்தாய்ப்பாய் முடித்து வைப்பார். அந்தக் கடைசிப் பந்தி தான் ஒவ்வொன்றுக்கும் அடி நாதம்.

கடந்த மூன்று தசப்தங்கள் தேங்கிய ஈழத்தின் வடபுலத்தோர் வாழ்வியலை ஆய்வு ரீதியான கண்ணோட்டத்தில் எப்படி அணுக முடியுமோ அதே போன்று இந்த "காக்கா கொத்திய காயம்" நூல் வழி திரட்டப்பட்டிருக்கும் அனுபவங்கள் அத்தகு பணியைச் செய்திருக்கிறது. இந்த நூல் சில மாதங்களுக்கு முன் வெளிவந்த போது இருந்த பரபரப்பு இப்போது இல்லை. அதாவது நூலைப் படித்து விட்டு நாலு வரியாவது எழுதியவரையும் காணோம். நூலாசிரியருக்கும் தன்னை "விளம்பரப்படுத்தத்" தெரியாது. ஆனால் அவ்வளவு தூ ரம் எளிதில் கடந்து விட முடியாத ஒரு படைப்பு இது என்பேன்.

## நரகாசூரன்கள்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது தம்பியிடம் "ஏன் ஓடினீங்கள்?" எனக் கேட்டேன். "உங்களை ஆமி கையை உயர்த்திக் கூட்டிக்கொண்டு போனபோது அம்மா எங்கட பெயரைக் கூப்பிட்டு அழுதுகொண்டு போனது கேட்டது. அதனால உங்களையும் ஆமி சுடப்போறாங்களோ! எண்ட பயத்தில எழும்பேல்லை. பிறகு அப்பகுதியில் ஆமியைக் காணல்லை. வைத்தியசாலை ஊழியர் ஒராளும் காயப்பட்டு எழும்பாமல் எங்களோடயிருந்தார். அவர் நாங்கள் இங்கயிருந்து தப்பி ஓடுவம் என்றார். நானும், தம்பியையும் தூக்கிக் கொண்டு மதில் ஏறிப் பாய்ந்து நல்லூர் கோயிலுக்கு ஓடினன். அதோட அப்பாவின் சட்டைப் பையில் இருந்த அம்புலன்ஸ் சாவியையும் நல்லூரில் கோயிலில் நின்ற வைத்திய பொறுப்பதிகாரி நச்சினாக்கினியரிடம் கொண்டுபோய் கொடுத்து நடந்ததைக் கூறினேன்" என்றான்.

தம்பியும் பிணத்தோடு பிணமாகத்தான் அந்த சம்பவத்தில் உயிர் தப்பியிருந்தான். "ஆமி சுட்டுக்கொண்டு வந்தபோது நான் வாசல்தான் நிண்டனான். அவன் சுட்டதில் எனக்கு முன் நின்றவர்கள் இரண்டு பேரும் வெடிபட்டு எனக்குமேல் விழுந்து விட்டினம். நான் அப்பிடியே அசைவில்லாமல் அவர்களின் உடலுக்கு கீழ கிடந்தன். ஆமி பிறகு சுட்டது எனக்குப்படேல. கொஞ்ச நேரத்தில் என்ர காலும் விறைச்சுப் போட்டுது. ஆமி வந்து என்ர காலை தனது சூக்காலால் தட்டிப்பார்த்தான். எனக்கு ஒன்டும் தெரியவில்லை, நானும் சத்தம்போடாமல் இருந்திட்டன். அதால நான் இறந்திட்டதா நினைச்சு விட்டுட்டுப் போயிட்டான். எனக்கு மேல இறந்து விழுந்தவர்கள் பயங்கர பாரம் ஒன்டும் செய்ய முடியாததால அப்படியே இருந்தன்" எனக்கூறினான்.

அன்றைக்கு வைத்தியசாலை மட்டுமல்ல யாழ்நகரை அண்டிய பகுதிகளில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். அன்றிலிருந்து தீபாவளி தினம் வலிகள் நிறைந்த ஒரு நாளாகவே இன்றும் தொடர்கின்றது. இன்றுவரை ஆறாத ரணமாக இருக்கும் சம்பவங்கள் எத்தனை. என் அப்பாவோடு மகிழ்ந்திருந்த காலங்கள், அப்பாவை இழந்து அனுபவித்த வேதனைகள் பல. எங்கள் எல்லோரையும் இச்சம்பவம் கடுமையாகப் பாதித்தது. குடும்பத்தில் இருவர் விடுதலைப்போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். அதில் இரண்டாவது தம்பி 1991ம் ஆண்டு கப்டன் வாணனாக வீரச்சாவடைந்தான்.

எனது அப்பாவுடன் கொல்லப்பட்ட வைத்தியர்கள், பணியாளர்கள் மற்றும் அன்றைய தினம் கொல்லப்பட்ட அனைத்து அப்பாவிப் பொதுமக்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன். (முற்றும்)

## எஸ்.ராமகிருஷ்ணனின்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹாக்கின்ஸ், கடும் மத எதிர்ப்பையும் மீறி நாதஸ்வரம் பயிலும் போலியோவால் தனது காலினை இழந்த முகமதிய சிறுவன் அபு, சமையல் வேலையைக் கூட விட்டுவிட்டு நாதஸ்வர இசை கேட்க சென்றுவிடும் வாய் பேச இயலாத ஊமை ஐயர் போன்றோர் நாவலில் நம் மனம் கவர் நாயகர்களாகி விடுகிறார்கள். என்னதான் கடவுளே ரசித்துக் கேட்கும் இசை என பெருமைப்பட்டுக் கொண்டாலும் மக்கள் மத்தியில் என்னமோ நாதஸ்வரத்திற்கு இரண்டாம் தர இடமாய் தான் இருக்கிறது.

அத்தோடு கோவில், திருமணம் முதலான நிகழ்ச்சிகளில் வாசிக்கும் இவர்களைப் பெரிய அளவில் நாம் கண்டு கொள்வதுமில்லை. இதுவரை குறைந்தபட்சம் ஒரு இரண்டு நிமிடம் கூட நின்று அவர்களின் வாசிப்பை கவனித்து உரிய பாராட்டுதலை அவர்களுக்கு வழங்கியதில்லை என எண்ணினால் நமக்கே சற்றுத் தலைகுனிவாகத் தான் இருக்கிறது. இனியாகிலும் இதுபோன்ற இடங்களில் நாதஸ்வரக் கலைஞர்களின் இசையை காது கொடுத்து ரசிக்க வேண்டும்.

நூலில் உள்ள சிறு சிறு அச்சுப் பிழைகள் மற்றும் நிறுத்தற்குறி பிழைகள் வாசிப்பதில் தடங்கலை ஏற்படுத்துவதாய் உள்ளன. தேசாந்திரி பதிப்பகம் இவ்விடயத்தில் இன்னும் சற்று கூடுதல் கவனம் செலுத்தினால் சிறப்பாய் இருக்கும். தமிழின் தொன்மையான நாதஸ்வர இசை குறித்தும் அதனை வாழ்க்கையாய் கொண்டோரைப் பற்றியும் அறிய ஓர் அரிய நூல் சஞ்சாரம்.

## பகுத்தறிவு...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்களும் இறக்கும் வரை பிரியமாட்டோம். ஆனால் மனிதருக்குப் பகுத்தறிவைப் படைத்துள்ளார். அவர்கள் தம் பகுத்தறிவை உபயோகித்து தமக்கு விரும்பியவரைத் தெரிவுசெய்ய வேண்டும். அப்படித் தெரியும் பொழுதுதான் அவர்கள் பகுத்தறிவை உபயோகிக்கத் தெரியாமல் இத்தகைய தவறுகளைச் செய்கிறார்கள்.'

'நீங்கள் சொல்வது எனக் கொன்றும் புரியவில்லையே'

'விளக்கமாய்ச் சொல்கிறேன் கேள். நீ என்னை விட்டு வேறு யாரையும் மணம்புரிவாயா? காதலிப்பாயா?'

'ஊகூம். மாட்டவே மாட்டேன்'

'உன்னை யாரும் வேறொருவருக்கு வலோற்காரமாக மணம் செய்தால்...'

'நான் உங்களை இறுகத் தழுவிக் கொள்வேன். உங்களிடமிருந்து என்னைப் பிரிக்க முயன்றால் நான் இறந்து விடுவேன்'

'பார்த்தாயா? நாங்களாக இறந்தாலன்றி அல்லது வேறு யாராவது நம்மைக் கொன்றால் தான் எங்களைப் பிரிக்கலாம். அத்தனை உத்தம குணம் படைத்தவர்கள் நாங்கள். ஆனால் பகுத்தறிவு படைத்த மனிதர்களோ....'

'வேண்டாம். சொல்லாதீர்கள். அந்தப் பகுத்தறிவை எங்களுக்குத் தராத கடவுளைப் போற்றுவோம்." ஏன்று மகிழ்வுடன் கூறியது அந்தக் காதலிக்கொடி.

# ஆரிட்டை சொல்லி அழ?

## புலம்பம் அலம்பல்



என்ரை ஐயோ ராசாவே
என்ரை ஐயோ ராசாவே

ஏன் இந்த வேலை
ஏன் இந்த இரத்த வெறி
ஏன் இந்த சோதினை
ஏன் இந்தக் காழ்ப்பு உணர்வு

அணில் பிடிக்கிறவரெண்டு
ரணிலை உனக்குப் பிடிக்கேல்லை
அதாலையோ? நீ கோவம் - அப்ப
தங்கக்கிரீடம் வைத்து
உன்னை உடன் தலைவராக்கின
சந்திரிக்காவோடை ஏன் கோவம்?

பெத்த வயிறு நொந்து
பேதலிச்சுப்போச்சு
செத்த கதை எல்லாம்
செரிமானமாகுதில்லை.

விடிவொண்டு தருவாய் எண்டு
விடிய விடியக் காத்திருந்தோம்
படி ஏறிப் போனாயோ
பரதேசி ஆனாயோ

சீனன் உனக்கு என்ன
சிங்காரம் செய்துவிட்டான்?
வசிய மருந்து வைச்சு
வளைச்சனோ தெரியாது!
மோடியின்ரை வயிறு
எரியிறதைப் பாக்காமல்
பரி ஏறும் பெருமாள்போல்
பக்கம் போய் சாய்ந்ததேன்?
சொல்லு கண்ணா சொல்லு
வெல்வாயோ நீ தேர்தலிலை
வம்பிலை மாட்டிடுவாய்
வழம் மாறி இடம்மாறி
சந்திரிகா போலை
வருத்தப்படுவாய் நீ!

ஆறடி நிலத்தை ஆயத்தமாக
வைச்சு
எலக்சனுக்குப் போனதை நீ
என்னெண்டு மறந்தனியோ?
அப்பம் வேணுமெண்டு
ஆசையாய் கேட்டிருந்தால்
ஆச்சி கையாலை
அரிசிமாப் பொடி எடுத்து
சட்டி அப்பம் சுட்டு
சருகுமாதிரி மொறமொறக்க
சொட்டுத் தேங்காயரைச்ச
கருவாட்டுச் சம்பலோடை
தந்திருப்போம் ராசாவே

குடிகெடுத்த உன்னை இனி
தமிழ் குடிகள் மட்டுமல்ல
உன்ரை இனத்தவரும்
உனை நம்பார் ராசாவே

எங்கள் கழுத்துக் கயித்தை
உன்ரை கையில் தந்திருந்தோம்
கலங்கரையாய் இருந்தெம்மை
கரைசேர்ப்பாய் என்றிருந்தோம்
முன்பின் சொல்லாது கயித்தை
முறுக்கினையோ! பாவி.

கிட்டடியிலை தீர்வு வரும்
மைத்திரி ரணில் கூட்டில்
அரசியல் மாற்றம் வரும்
காணி விடுபடும்
கைதிகளும் விடுபடுவர்
ஆமியும் போகும்
அவைபிடிச்ச காணி வரும்
பட்டதாரிக்கு வேலைவரும்
பாமரருக்குப் பென்சன்வரும்
வாக்குப்பெற்று வெற்றி கண்ட
கூட்டமைப்பும் சொல்லிச்சுது
ஆட்சி மாறிப் போச்சுதிப்ப
அரியணையும் பறிபோச்சு
சுமந்திரனுக்குப் படைபோச்சு
சம்மந்தருக்கு மூச்சுப் போச்சு
மாவைக்குப் பேச்சுப் போச்சு
மற்றவைக்கெல்லாம் சீற்றுப்
போச்சு

அரசியலை ஸ்திரி போட
ஆளுமையுள்ளவர் மைத்திரி எண்டு
அல்லும் பகலும்
அயராது கனவு கண்டு
ஆறியிருந்த வேளையிலே...
ஆட்சி கவிண்டது எண்டு
அலறியது தொலைக்காட்சி..

இடி ஓசை கேட்டு
செத்துப்போன பாம்பைப்போலை
அடிவிழுந்து கிடக்கின்றோம்
அடி எடுத்து வைச்சு நடக்க
ஆற்றலில்லை எங்களுக்கு

வேரில்லா மரம்போலை
பாறிப்போய்க் கிடக்கின்றோம்
கீறிக் கிழிச்சுப்போட்ட
உப்புக் கருவாடாய்
உயிரற்றுக் கிடக்கிறம் எண்டதை
ஆரிட்டைச் சொல்லி அழ?

- கோவரங்கள்.

# சமூகத்தை....

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்விமுறை வேறு எங்காவது இருக்க வாய்ப்பு உள்ளது"' என்கிறார்கள் அவர்கள். இல்லாத நாற்காலியைத் தேடி எடுத்து ஏறி அமர்ந்து, தனக்குத்தானே முடிசூட்டிக்கொள்ளும் தற்பெருமையாளர்கள் நிறைந்த உலகத்தில் இது பண்புமிக்க பார்வை என வியக்கின்றனர் பலர்.

- மதிக்கத்தக்க மனநிலை. பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது, அரச அதிபர் மற்றும் திணைக்களப் பணிப்பாளர்கள் போன்று மிகுந்த சமூகக் கௌரவம் உடையது தொழில்.
- அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங்களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு...
- மூன்றில் ஒரு பின்லாந்து குழந்தைக்கு, ஆசிரியர் ஆவதுதான் தன் வாழ் நாள் லட்சியம். அதே நேரம் அங்கு ஆசிரியர் ஆவது அத்தனை சுலபம் அல்ல!..
- மேல்நிலை வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்...
- ஐந்து ஆண்டுகள் உண்டு, உறைவிடப் பள்ளிகளில் சேர்ந்து கடும் பயிற்சி எடுக்க வேண்டும். பிறகு, ஆறு மாத காலம் ராணுவப் பயிற்சி.
- பின்பு ஒரு வருடத்துக்கு வெவ்வேறு பள்ளிகளில் நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி.ஏதாவது ஒரு பாடத்தில் புரஜெக்ட் மேற்கொள்ளுவது.குழந்தை உரிமைப் பயிலரங்கங்களில் பங்கேற்பது. நாட்டின் சட்டத் திட்டங்கள் குறித்த தெளிவுக்காக தேசிய அமைப்புகளிடம் இருந்து சான்றிதழ். தீயணைப்பு, தற்காப்புப் பயிற்சி, முதலுதவி செய்வதற்கான மருத்துவச் சான்று. என ஆசிரியர் பயிற்சிக்கு சுமார் ஏழு வருடங்களைச் செலவிட வேண்டும்.இப்படி ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில் பின்லாந்து மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள்தான், அங்கு கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறது!

*01.* பிள்ளைகள் எதாவது செய்தால் எப்போதும் குறை கூறுதல், அவர்கள் பாராட்டும்படி செய்தாலும் கண்டு கொள்ளாதிருத்தல் போன்ற செயல்களை பலர் செய்கிறார்கள் இதனால் பிள்ளைகளின் மன வளர்ச்சி குன்றும்.

*02.* எந்தக் குழந்தையும் பின்னால் எப்படி ஆகுமென எவருமே கூற முடியாது. மூடன், அறிவாளியாகலாம்... பைத்தியம், தெளிந்த சித்தமுடையவனாகலாம்... ஆகவே பிள்ளைகளை ஒருகாலமும் தப்பாக மட்டும்கட்டி அலட்சியம் செய்யக் கூடாது.

*03.* தாமஸ் ஆல்வா எடிசனை மரமண்டை என்று பாடசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டவர் பின்னாளில் ஆயிரம் கண்டு பிடிப்புக்களுக்கு அவரே அதிபதி.

*04.* லூயி பாஸ்டியர் சராசரி மாணவனாக பாடசாலையில் இருந்தவர் பின்னாளில் நோபல் பரிசு வாங்கினார்.

*05.* ஆல்பிரட் ஐன்ஸ்டைனை, அவர் ஆசிரியர், "இவனை போன்ற மூளை அழுகிய மாணவனை நான் பார்த்ததே இல்லை" என்றார் அவர் ஆசிரியர் ஆனால் அவரே 20 ம் நூற்றாண்டின் அதி சிறந்த விஞ்ஞானியானார்.

*06.* குழந்தைகளுடன் ஒரு நாளில் சிறிது நேரமாவது பேசுங்கள், நல்லதைப் பேசுங்கள் கனிவுடன் பேசுங்கள். அவர்கள் குறைகளைப் பற்றி அதிக நேரம் பேசாதீர்கள் நிறைகளை பற்றிப் பேசுங்கள்.

*07.* பிள்ளைகளுடன் யாரையும் ஒப்பிட்டு பேசாதீர்கள், அவன் அவனே.. நீங்கள் நீங்களே.. நீங்களே முன்னுதாரணமாக இருங்கள். உங்களைப் பார்த்து அவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

*08.* வாழ்வில் வெற்றிபெற்றவரைப்பற்றி பேசுங்கள், ஒவ்வொரு துறையிலும் சிறந்தவர்களைப்பற்றி பேசுங்கள்.

*09.* எப்படி இருக்கக் கூடாது என்று ஒப்பிட்டு பேசுவதைவிட எப்படி இருக்க வேண்டுமென ஒரு முன்னுதாரண மனிதரைப்பற்றிப் பேசுங்கள்.

*10.* பிள்ளைகளுக்கு வீட்டுக்குள் விலங்கிடாதீர்கள் வீடு ஒரு சிறைச்சாலைக் கூடமல்ல மனிதர்களை தோற்றுவிக்கும் கோயில்.

*11.* நல்ல மேற்கோள்களை கொடுங்கள், சுதந்திரம் கொடுத்து, கட்டாயப்படுத்தி வழிக்குக் கொண்டு வாருங்கள்.

*12.* மலர் தூவியுள்ள பாதையைப்பற்றி பிள்ளைகளுக்கு சொன்னால் அவர்கள் முள் நிறைந்த பாதையை புரிந்து கொள்வார்கள்.

*13.* உழைப்பைப்பற்றி சொல்லிக் கொடுங்கள் அவர்கள் உழைப்பில்லாத கேடுகளை புரிந்துகொள்வார்கள்.

*14.* வெற்றி பெற்றவர்களை சொல்லும்போது தோல்வியின் காரணங்களை அவன் அறிந்து கொள்வான்.

*15.* சுறு சுறுப்பை சொல்லிக் கொடுத்தால் அவன் சோம்பலை அடையாளம் காண்பான், விதியை வென்றவர்களை சொல்லும்போது அவன் வேதனையில் நொந்து அழிந்தவர்களை கண்டு கொள்வான் இது போதும்...

முதலில் நாம் மாற வேண்டும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. மாற்றம் ஒன்றே மாறாதது.நல்ல மாற்றம் தான் வளர்ச்சியை தரும். பின்லாந்தின் கல்விமுறையிலிருந்து நாம் கற்றுக் கொண்டு மாறுவோம்! குழந்தைகளின் எதிர்காலத்தைச் சிறப்பாக மாற்றுவோம்!

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 51

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

சுந்தரம் துணுக்காய்க்கு வந்து சேர்ந்த போது நன்கு களைத் தேவிட்டான். முக வெயிலும் வேகமாகச் சைக்கிள் ஓடிய மையும் அவனின் உடலை வியர்வையில் குளிப்பாட்டிவிட்டன. சங்கக்கடைக்கு அருகில் இருந்த ஒரு தேனீர் கடையின் முன்பு சைக்கிளை விட்டுப் பூட்டிவிட்டு உள்ளே போய் வாங்கினில் அமர்ந்து கொண்டான்.

“அண்ணை இரண்டு பணிசும், ஒரு பிளேன்ரீயும் தாங்கோ”, என்றான் சுந்தரம். அவனை நன்றாக உற்றுப் பார்த்த கடைக்காரர். “தம்பி.. நீர் சங்கரசிவத்தின்ரை தம்பியல்லே?”, எனக் கேட் டார்.

அந்தக் கேள்வியில் வியப்படைந்த சுந்தரம் அவரின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, “அட.. எங்கடை சைமன் அண்ணை”, என் றான்.

“ம்.. கண்டு பிடிச்சிட்டீர்”, என்று சிரித்தவாறு சொல்லிவிட்டு ஒரு தட்டில் பணிசையும், வாழைப்பழங்களையும் கொண்டு வந்து வைத்தார்.

“உங்கடையே கடை?”

“ஓ.. ‘ஜெயசிக்குறு’ சண்டையில ஒரு கால் போட்டுது. ஒரே தங்கச்சி.. அவளும் இயக்கத்துக்குப் போட்டாள். வயது போன அம்மா, அப்பாவைப் பாக்க ஒருதருமில்லை.. பின்னை துண்டு குடுத் திட்டு வந்து இந்தக் கடையைப் போட்டிருக்கிறன்”.

அவர் சொல்லி முடித்துவிட்டு தேனீர் பட்டடையில் போய் பாத் திரத்தில் சாயத்தையும், சீனியையும் போட்டு சுடுநீரை விட்டு

இழுத்து ஆத்த ஆரம்பித்தார். அப்போதுதான் அவர் செயற்கைக் காலுடன் இழுத்து நடப்பதைச் சுந்தரம் கவனித்தான்.

சிவம் ஒரு சாதாரண போராளி யாக இருந்த போது சைமன் ஒரு அணித்தலைவராக இருந்தார். அவர் இரண்டு, மூன்று தடவைகள் சிவத்துடன் பரமசிவம் வீட்டுக்கு வந்து போயிருக்கிறார்.

சுந்தரம் தாங்கள் இடம் பெயர்ந்து முழங்காவிலில் இருப்பதை யும் காசு வாங்குவதற் காக புத்துவெட்டுவான் போகும் விஷயத் தையும் அவரிடம் சொன்னான்.

“மல்லாவியிலை எங்கடை இரண்டு ஏக்கர் தென்னங்காணியும்

மூண்டு ஏக்கர் வயலும் இருக்கு.. விருப்பமெண்டால் அங்க வந்திருக் கச் சொல்லி ஐயாட்ட சொல்லுங்கோ”, என்றார் சைமன்.

“முழங்காவிலிலை தோட்ட வேலை துவங்கியிட்டம்.. எண் டாலும் ஐயாட்டை சொல்லிப் பாக்கிறன்”, என்றான் சுந்தரம்.

பணிசைச் சாப்பிட்டு விட்டுதேனீரையும் அருந்திவிட் டுப் புறப் பட்டான் சுந்தரம். அவன் எவ்வளவு வலியுறுத்தியும் சைமன் காசு வாங்க மறுத்துவிட்டார்.

ஒரு காலத்தில் நிமிர்ந்த நெஞ்சும், தோளில் துப்பாக்கியும் இடுப்பில் பிஸ்டலும், ஆஜானு பாகுவாய் நடந்த சைமன், இப்போ காலை இழுத்து இழுத்து நடந்து, தேனீர் ஊற்றப் போனதை நினைத்த போது சுந்தரத்துக்கு



மனதை என்னவோ செய்தது. ஒரு பெருமூச்சுடன் எல்லாமே விடுதலைக்குக் கொடுத்த விலை என எண்ணியவனாக சைக்கிளை ஓட ஆரம்பித்தான்.

நேராக மாங்குளம் வீதியில் வந்த சிவம் சக்கத்துச் சந்தியில் திரும்பி கொக்காவில் வீதியில் இறங்கினான். சிறிது தூரம் வந்ததும் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் வெண்ணிறக் கல்லறைகளால் நிறைந்து விடு தலைக்கான ஒப்புயர்வற்ற சாட்சி யமாக நிமிர்ந்து நின்றது.

ஒரு நிமிடம் நின்று மனதிற்குள் அஞ்சலி செலுத்திவிட்டுப் புறப் பட்டான்.

பாடசாலை, பண்ணை என்பவற் றைக் கடந்து நீர் வற்றிக் கிடந்த அந்த “கோஸ்வேயால்” இறங்கி ஏறி கிரவல் வீதியில் பய ணத்தைத் தொடர்ந்தான்.

வழியில் எதிர்ப்பட்ட சிறு வெளியைத் தாண்டி மரங்கள் அடர்ந்த பகுதிக்கு வந்த போது அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்கவைத்துவிட்டது. அது என்னவாக இருக்கும் என அவனுள் எழுந்த கேள்விக்கு விடை கிடைத்த போது அவன் இரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. சைக்கிளை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு அவன் அதனருகில் சென்றான்.

மண்ணால் கல்லறை போன்று உருவாக்கப்பட்ட பதினொரு மண் அமைப்புக்களில் தடிகள் நடப்பட்டு அதில் அறையப் பட்ட தகரத் துண்டுகளில் பெண்பிள்ளைகளின் பெயர்கள் எழுதப் பட்டிருந்தன. அவை கடந்த வருடம் மாவீரர் வாரத்தின் போது மல்லாவி மருத்துவ மனையில் முதலுதவிப் பயிற்சி பெற்றுவிட்டுத் திரும்பி அம்பு லன்ஸ் வாகனமொன்றில் வந்து கொண்டிருந்தபோது

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியினரால் மேற்கொள் ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் உயிரிழந்த ஐயங்கன் குளம் பாட சாலை மாணவிகளின் நினைவுச் சின்னங்கள் என்பதை சுந்தரம் புரிந்து கொண்டான்.

அதேவேளையில் மடுவில் ஆழ ஊடுருவும் படையினரால் தமிழ்த் தினப் போட்டிகளில் கலந்துவிட் டுத் திரும்பிய பாடசாலை மாணவ, மாணவியர் கிளைமோர் தாக்குத லில் கொல்லப்பட்டதும், அந்தப் பிள்ளைகளின் பெற்றோர் கதறி அழுததும் அவன் நினைவில் வந்து போயின.

விடுதலைப்புலிகளிடம் எங்காவது ஒரு பலத்த அடி வாங்கினால் அதற்குப் பதிலாக ஏதுமறியாத அப்பாவி மாணவ மாணவியரைப் பலியெடுப்பதை இலங்கைப் படையினர் தங்கள் கொள் கையாகக் கொண்டுள்ளனர் என்பதன் வலிமையான சாட்சியங் களாகவே அந்த நினைவுச் சின்னங்கள் நிமிர்ந்து நின்றன.

எறித்துக்கொண்டிருந்த பத்து மணிச் சித்திரை வெயிலை விட அந்த நினைவுச் சின்னங்கள் அவன் உடலையும் மனதையும் பல மடங்கு வெப்பத்தால் கொதிக்க வைத்தன.

அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். சற்றுத் தொலை வில் நாவுண்ணி மரங்களில் பல வர்ணங்களில் மலர்கள் மலர்ந்து கிடந்தன. அவன் அவற்றின் அருகில் போய் சிவப்பு வர்ண மலர்களை மட்டும் தெரிந்தெடுத்து பிடுங்கிக் கொண்டான்.

கை நிறைய மலர்களைக் கொண்டுவந்து அவற்றின் முன் னால் போட்டுவிட்டு அஞ்சலி செலுத்தினான். அவன் மனம் அந்த மாணவிகளுக்காக கதறி அழுத போதும் கண்களில் நீர் மட்டும் வர மறுத்துவிட்டது. ஆனால் அவை இரண்டும் இரத்தமாய்ச் சிவந்துபோயிருந்தன.

அந்த இடத்தைவிட்டு அகல முடியாதபடி ஏதோ ஒருவித உணர்வு இழுத்துப்பிடித்த போதும், அதில் நெடுநேரம் நிற் பதில் எவ்வித பயனும் இல்லை என்பதை உணர்ந்தவனாக சைக் கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

குளக்கட்டைத் தாண்டி மருத்துவ மனை, பாடசாலை என்பவை அமைந்திருந்த இடத்துக்கு வந்தபோது வீதியில் சிறிது சன நட மாட்டம் தென்பட்டது.

மருத்துவமனை விறாந்தை மக்களால் நிரம்பி வழிந்தது. பாடசாலையும் ஏதோ ஒரு சோகத் தில் மூழ்கியிருப்பது போன்று அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவன் அருகில் தென்பட்ட ஒரு தேனீர்க் கடையில் இறங்கி வயிறு நிறைய தண்ணீர் குடித்துவிட்டு மீண்டும் சைக்கிளில் ஏறிக்கொண்டான்.

காடும், கிரவல் வெளியும் கொண்ட அந்தப் பாதையில் வெயில் நேரம் சைக்கிள் ஓடுவது அவ்வளவு சுலபமாக இருக்க வில்லை. மீண்டும் ஒரு காட் டாறு குறுக்கிட்ட வளைவில் நின்று மருதமர நிழலில் களைப் பாறிவிட்டுப் புறப்பட்டான்.

அவன் சவாரிச் செல்வராஜா வீட்டை நெருங்கிய போது பன்னிரண்டு மணியை நெருங்கி விட்டது. அவன் சைக்கிளைவிட்டு

இறங்கி, காயா தடிகளால் அமைக்கப்பட்டிருந்த கடப்படி யில் நின்று, “மாமா, மாமா..”, எனக் கூப்பிட்டான்.

அந்தப் பழைய கொலனி வீட்டுக்குள்ளிருந்து எட்டிப்பார்த்த செல்வராஜா வெளியே வந்து, “சுந்தரமே.. வா.. தம்பி” என அழைத்தவாறே முற்றத்துக்கு வந்து கடப்புத் தடிகளைக் கழற்றினார்.

அவரைக் கண்டதும் சுந்தரம் திகைத்தே போய்விட்டான். திரண்ட தோள்களும் விம்மிப் புடைத்த மார்பும் வலிமையான கரங்களும் நிமிர்ந்த நடையும் கொண்ட அவரின் நெடிய உருவம்

இடிந்து போய்விட்டிருந்தது. அவரின் ஆஜானுபாகுவான தேகம் மெலிந்து முன்புறமாக வளைந்து விட்டது. பாதி நரைத்துப் போய் விட்ட தாடி தாறுமாறாக வளர்ந்திருந்தது.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# எஸ்.ராமகிருஷ்ணனின் 'சஞ்சாரம்'

■ ஜெ.திவாகர்

எஸ்.ராமகிருஷ்ணன் எழுதிய 'சஞ்சாரம்' நாவல் தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாகக் கருதப்படும் நாதஸ்வரக் கலையைப் பற்றிய, அதன் கலைஞர்கள் பற்றிய, அவர்கள் படும் துயரம், அவர்களின் பெருமையென பல்வேறு தரப்பட்ட தகவல்களை அலுப்பூட்டாமல் பல மனிதர்களின் கதைகளின் வழியே நமக்கு உணர்த்தி நம்மை உடன் அழைத்துச் செல்கிறது.




ரத்தினமும், பக்கிரியும் ஓதியூரைச் சார்ந்த நாதஸ்வரக் கலைஞர்கள். அவர்கள் மூதூரில் உள்ள கருப்பசாமி கோவிலின் வேட்டைத் திருவிழாவிற்கு நாதஸ்வரம் வாசிக்கையில் அவ்வூர் மக்களுக்குள் நிகழும் கைகலப்பில் பக்கிரியின் பிடறியில் அடி விழுவதில் தொடங்குகிறது நாவல். அதன்பின் தன்னை அடித்தவனை பக்கிரி திருப்பி அடித்து விட அவர்களைப் பிடித்து மரத்தில் கட்டி வைத்து விடுகிறார்கள். இரவோடு இரவாய் கோவில் அருகிலுள்ள மண்டபத்தின் கீற்றுக்குத் தீ வைத்து விட்டு அங்கிருந்து ரத்தினமும், பக்கிரியும் தப்பித்து, பக்கிரியின் அக்கா வீடு இருக்கும் கொடுமுடிக்கு வந்து விடுகின்றனர். அத்தீவிபத்தில் சிலர் இறந்து விட இவர்களைத் தேடும் போலீஸிடம் இவர்கள் சிக்கினார்களா இல்லையா என்பதே கதை.

கதையின் கரு என்னவோ சாதாரணமானது தான். ஆனால் அது எடுத்துக் கொண்ட களம் மிகப் பரந்துபட்டது.சமூகத்தில் நாதஸ்வரக் கலைஞர்கள் எந்த அளவுக்கு அவமானப்படுத்தப்படுகிறார்கள் என்பதைக் கோவில் திருவிழா, திருமணம் எனத் தொடங்கி ஒவ்வொரு இடத்திலும் அவர்கள் படும் அவலத்தை உணர வைக்கிறார் ஆசிரியர். நாதஸ்வரக் கலையில் பலர் புகழ்பெற்றிருந்தாலும் எண்ணிக்கையிலடங்கா கலைஞர்கள் இன்றும் வறுமையிலேயே உழன்று வருவதை எண்ணுகையில் வருத்தமாக தான் உள்ளது.

கரிசல் கிராமங்களைப் பற்றி அறியாதவர்களுக்குக் கூட அதன் குறுக்குவெட்டுத் தோற்றத்தைப் பல்வேறு இடங்களில் நாவலினூடே படம் பிடித்துக் காட்டுகிறார். கதையை வாசித்து முடித்த வெகு நேரத்திற்கு பிறகும் கண் தெரியாத இசைஞன் தன்னாசி உங்கள் நினைவிலிருந்து அகலாமல் உடன் பயணிப்பார். பல இடங்களில் நாதஸ்வரக் கலைஞர்கள் வாசிப்பதை எஸ்.ரா. விவரிக்கையில் ஏதோ அவர்கள் நம் காது மடல்களுக்கு அருகில் அமர்ந்து தேனிசையை நம் காதுக்குள் செலுத்துவதாய் ஒரு தோற்றம் உண்டாக்குவது நூலாசிரியரின் எழுத்து செய்யும் மாயமின்றி வேறென்ன?


நாதஸ்வர இசையைக் கேட்டு அதில் மயங்கி இந்தியாவிற்கே வந்து நாதஸ்வரம் கற்றுக் கொள்ளும் வெள்ளைக்கார

(18ஆம் பக்கம் பார்க்க)

# 'த ஐலன்ட்'

■ பிரபு

2005ஆம் ஆண்டு வெளிவந்தது 'த ஐலன்ட்' அமெரிக்கத் திரைப்படம். ஒரு முற்றிலும் தனிமைப்படுத்தப் பட்ட ஒரு மர்ம இடத்தில் மனித சமூகம் ஒன்று வளர்க்கப்படுகிறது. ஆம் வளர்கிறது அல்ல வளர்க்கப்படுகிறது. அவர்கள் யாருமே நம்மைப் போல சாதாரணமாகப் பிறந்தவர்கள் அல்ல. அனைவருமே உயர் விஞ்ஞான தொழில் நுட்பத்தில் உருவாக்கப்பட்ட குளோனிங் மனிதர்கள்.அவர்களை ஒரு பெரும் நிறுவனம் இயக்கிக்கொண்டிருக்கும். திடீரென்று




அவர்களில் சிலர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பெயர் வந்தவுடன் சுற்றி இருப்பவர்கள் ஆனந்தக் கண்ணீரோடு அவர்களை அணைத்து வழியனுப்பி வைப்பார்கள். அந்த நபரும் மிகுந்த மகிழ்ச்சியோடு பிரியாவிடை பெற்றுச் செல்வார்.

காரணம் அவர்களைத் தீவுக்கு அனுப்பப் போகிறோம் என்று சொல்லி வைத்து இருப்பார்கள். அந்தத் தீவு அனைத்து வசதியும் நிரம்பிய சொர்க்கத் தீவு. ஆனால் அதற்குச் செல்ல பெயர் வரும் வரை காத்திருக்க வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டு இருக்கும். எனவே அனைவரும் மோட்சத்திற்குக் காத்திருக்கும் மனிதர்களை போல, அந்தத் தீவுக்குச் செல்ல தங்கள் பெயர் வரவேண்டும் என்ற ஆசையில் இருப்பார்கள்.


இப்படிப்பட்ட விசித்திரமான இடத்திலிருந்து தன்னைச் சுற்றி ஏதோ வித்தியாசமாக நடப்பதை உணர்ந்து கொள்கிறான் கதாநாயகன். அந்தக் கூட்டத்தில் அவன் ஒருவன் மட்டுமே விழிப்பு அடைந்த மனிதன். தீவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி இவர்கள் அழைத்துச் செல்லும் ஆட்களை வைத்து என்ன செய்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கும் போது அதிர்ச்சியில் உறைந்து போகிறான்.அந்த இடத்திலிருந்து தனது காதலியுடன் தப்பி வெளியேறுகிறான். முதல்முறையாக வெளி உலகம் என்ற ஒன்று இருப்பதைக் காண்கிறான். பாலைவனத்திற்கு நடுவில், பூமிக்கடியில் தனிமைப்படுத்தப்பட்டு தாங்கள் வைக்கப்பட்டு ஏமாற்றப்பட்டு இருப்பதை காண்கிறான். நிஜ உலகத்தில் கால்பதிக்கும் அவன் இப்போதைக்கு இந்த உலகத்தைப் பொறுத்தவரை குழந்தை. இந்த உலகத்தில் இருக்கும் எதையும் அவன் இதுவரை கண்டதில்லை.

அந்த நிஜ உலகத்தில் தான் யாருடைய குளோனிங்கோ, அந்த தன்னுடைய நிஜ இரட்டையைக் காண்கிறான். இந்த உலகத்தில் அவன் ஒரு மிகப் பெரிய பணக்காரன். தனது இடத்தில் தான் பார்த்த மனிதர்கள் அனைவருக்கும் ஒரு நிஜ இரட்டை இந்த உலகத்தில் இருப்பதைக் கண்டுபிடிக்கிறான். உள்ளே இருக்கும் அனைவரும் ஏமாற்றப்பட்ட பலிக்கடாக்கள் என்பதை உணர்கிறான். அவர்கள் எதற்காக அங்கே வளர்க்கப்பட்டார்கள் என்ற கொடூரமான அந்தக் காரணத்தையும் கொடிய நோக்கத்தையும் இறுதியில் கண்டுபிடிக்கிறான். விறுவிறுப்பான திரைக்கதை. அறிவியல் புனைகதை விரும்பிகள் பார்க்க வேண்டிய திரைப்படம்.




· உங்கள் ஆக்கங்களை 'வாசிகை' , ஆசிரியர், **புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

# நான் என்ற பறவை



கோடையின் கரிய வெப்பம்
உருகும் வெயிலை
மேயும் நிலத்தின் மேல்
சுடு புழுதி குளிக்கும்
பறவை நான்.

அறுவடையாக்கப்பட்ட
வயற்காடு மண்ணிடையே
தவறிய
நெல்மணிகளைப் பொறுக்கி
நெல் தாவரத்தின்
காம்பில் உறையும் பனித்துளி
குடித்துத் தாகம் பருகும்
பறவை நான்.

மழைத் தூறல் விழுந்த
வெட்டவெளி முகட்டின்
ஈரம் கசிந்த புற்செடியில்
புணர்வின் தூண்டலில்
உதிர்ந்த மயில் பீலி மேல்
நடந்து செல்லும் பறவை நான்.

இராணுவ இரகசியம் பதுக்கப்படும்
ஆழ்குகை வான்வெளி மேல்
சுதந்திரம் பறித்த யுத்த
சாசனத்தை
மீறிப் பறக்கும் பறவை நான்.

வற்றிக் கொண்டிருக்கும்
நதியின் கடைசிச் சொட்டு நீரில்
குதிக்கும் மீனை
கால்களில் கௌவிய பறவை நான்.

இருள் மருண்ட
உப்புக் கடல் வெளியின்
தொலைதூரத்து
ஒற்றை விளக்கு ஒளி விம்பம்
அசையும் வேளை
கரையில் திசை தேடும்
பறவை நான்.

- கோ.நாதன்

# சமூகத்தை தவறாக வழிநடத்துகின்ற கல்வி முறை மாற்றப்படவேண்டும்

## பின்லாந்தின் கல்விமுறையிலிருந்து நாம் கற்றுக் கொள்வோம்

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 31


கல்வித்துறையில் உள்ள அதிகாரிகளால் முடியாது இருக்கின்ற விடயமா இது? ஒரே தடவையில் இதுபோன்ற விடயங்களை நடைமுறைப்படுத்த முடியாவிட்டாலும் ஒரு திட்ட அடிப்படையில் படிப்படியாக முயற்சிக்கலாமே!

இங்குள்ள கல்விமுறையில் மாற்றங்கள்தேவை என்கின்றனர் சமூக அக்கறை கொண்ட கல்வியாளர்கள். ஆனால் அதைக் கண்டு கொள்ளாதவர்களாக நாம் நாளையும் பொழுதையும் வீணாக்கிக்கொண்டிருக்கிறோம். ஆனால் நல்ல ஆரோக்கியமான பிரஜைகளால் நிரம்பப்பெற்ற நாடு என்ற சிந்தனை வரும்போதுவிழித்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய தருணம் இது. பெற்றோர்கள், கல்வியாளர்கள், கல்வி நிறுவனங்கள், ஆட்சியாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய நேரம் இது. குழந்தைகள் வளர்ப்பில் நாம் கற்றுக் கொள்ள வேண்டியது அதிகம் இருக்கிறது. இல்லையென்று சொல்லாதீர்கள். பின்லாந்து ஒரு உதாரணமாகட்டும்.

முதலில், பிள்ளைகளுக்கு நல்ல சிந்தனைகளை ஏற்படுத்துங்கள்! சிறுபிள்ளைதானே என்ற அலட்சியம் வேண்டாம். ஒரு குழந்தையைவிட நாம் உயர்ந்தவர் என்ற எண்ணமும் வேண்டாம்.

உலகில் தலைசிறந்த கல்வியில் பின்லாந்து முதல் இடத்தில் உள்ளது. அப்படி என்னதான் விசேடம் பின்லாந்து கல்வி முறையில் இருக்கிறது? உலகத்தை சரியாக அறிந்து கொள்ள அங்கு காணப்படும் கல்விமுறை குழந்தைகளுக்கு உதவுகிறது. அந்த நாட்டின் சிறந்த கல்விமுறையால் அவன் சரியாக வழிகாட்டப்படுகிறான்.

- பின்லாந்தில் ஏழு வயதில் தான் ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லத் தொடங்குகிறது.
- மூன்று அல்லது நான்கு வயதில் முன்பள்ளி 5ஆம் தரத்தில் புலமைப்பரிசில் பரீட்சை என்ற சித்திரவதை அங்கு இல்லை.
- கருவறையில் இருந்து வெளியில் வந்ததுமே குடுகுடுவென ஓடிச்சென்று பள்ளியில் உட்கார்ந்து கொள்ளும் எந்த அவசரமும் அவர்களுக்கு இ[illegible]
- எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில்



இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான்...

- இவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணுவது மூடநம்பிக்கை...
- ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாட்கள்தான் பள்ளிக்கூடம் செல்கிறது. மீதி நாட்கள் அவர்களுக்கு விடுமுறை.
- ஒவ்வொரு நாளும் பள்ளி இயங்கும் நேரமும் குறைவு தான். அந்த நேரத்திலும்கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டு, மற்றும் பிற கலைகளுக்கும் கொடுக்கப்படுகிறது.
- ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் ஓய்வறை உண்டு. படிக்கப் பிடிக்கவில்லை அல்லது சோர்வாக இருக்கிறது என்றால், மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம்...
- முக்கியமாக, 13 வயது வரை றாங்கிங் (Ranking) என்ற தரம் பிரிக்கும் கலாசாரம் அங்கு கிடையாது. புறோகிறஸ் றிபோட் Progress Report கொடுத்துப் பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும் வன்முறை கிடையாது...
- தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்...
- கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை. அதனால் சக மாணவர்களைப் போட்டியாளர்களாகக் கருதும் மனப்பாங்கும் அங்கு இல்லை...




- இவர்களுக்கு வீட்டுப்பாடம் கொடுக்கப்படுவது இல்லை. மாணவர்களுக்கு எந்தப் பாடம் பிடிக்கிறதோ அதில் இருந்து அவர்களே வீட்டுப்பாடம் செய்து வரலாம்...
- ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மருத்துவர் இருப்பார். அவர், மாணவர்களின் உடல்நிலையை தனிப்பட்ட முறையில் கவனித்து ஆலோசனைகள் வழங்குவார்...
- ஒரு பள்ளியில் அதிகபட்சமாக 600 மாணவர்கள் இருக்கலாம் அதற்கு அதிக எண்ணிக்கை கூடவே கூடாது...
- முக்கியமாக பின்லாந்தில் தனியார் பள்ளிக்கூடமே கிடையாது. அங்கு கல்வி என்பது முழுக்க முழுக்க அரசின் வசம் இருக்கிறது. கோடீசுவரராக இருந்தாலும், நடுத்தர வர்க்கத்தினராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும். அனைவரின் குழந்தைகளும் ஒரே பள்ளியில்தான் படிக்க வேண்டும். 'எனது பிள்ளை இன்ரநேஷனல் ஸ்கூலில் படிக்கிறார்' என யாரும் பெருமைப்பட முடியாது...
- அனைவருக்கும் சம தரமுள்ள கல்வி என்ற உத்தரவாதம் உள்ளது. அதனால்தான் பின்லாந்தில் 99 சதவிகிதம் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றுவிடுகின்றனர். அதில் 94 சதவிகிதம் பேர் உயர்கல்விக்குச் செல்கின்றனர். 'ரியூஷன்'என்ற அருவருப்பான கலாசாரம், அந்த நாட்டுக்கு அறிமுகமே இல்லை...
- தேர்வுகளை அடிப்படை முறைகளாக இல்லாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள்தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு தேர்வுகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர். "இது எப்படி?" என்பது கல்வியாளர்களுக்கே புரியாத புதிர். அந்தப் புதிருக்கான விடையை, ஐ.நா சபையின் ஆய்வு முடிவு அவிழ்த்தது. உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் வெளியிடுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கிறது. மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் குழந்தைகள், அறிவை ஆர்வத்துடன் சுவைப்பதில் புதிர் எதுவும் இல்லை...
- பின்லாந்து கல்வி முறையின் இத்தகைய சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகமெங்கும் உள்ள கல்வியாளர்களும், பிரதிநிதிகளும் அந்த நாட்டை நோக்கிக் குவிகின்றனர். உலகின் 56 நாடுகளில் இருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்கின்றனர்...
- நாட்டின் அந்நியச் செலாவணியில் கணிசமான சதவிகிதம் கல்விச் சுற்றுலாவின் மூலமே வருகிறது...
- ஆனால், தங்களை நோக்கி வீசப்படும் புகழ்மாலைகளை பின்லாந்தின் கல்வியாளர்களும் அமைச்சர்களும் ஓடோடி வந்து ஏற்றுக்கொள்வதுமில்லை, ஏந்திக்கொள்வதுவும் இல்லை. அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், "'பின்லாந்து கல்வி முறைதான் (Finnish Education system) உலகிலேயே சிறந்தது எனச் சொல்ல முடியாது. ஏனெனில் "OCED" அமைப்பின் ஆய்வில் எல்லா உலக நாடு களும் உள்ளடக்கப்படாத நிலையில் இப்படி ஒரு முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது. எங்களைவிடச் சிறந்த

(19ஆ[illegible]ர்க்க)



இந்தியாவின் இஸ்ரோ செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பிய 'மங்கள்யான்' விண்கலத்தை மையமாக படம் ஒன்று உருவாகிறது.

இதில் அக்ஷய் குமார், வித்யாபாலன் நடிக்கின்றனர். நித்யாமேனன், டாப்ஸி ஆகியோரும் இந்தப் படத்தில் நடிக்க உள்ளனர்.

'ப்ளு வேல்' விளையாட்டை மையப்படுத்தி அறிமுக இயக்குநர் ரங்கநாதன் இயக்கும் படத்தில் நடிகை பூர்ணா நடிக்கிறார். இதில் அவருக்கு போலிஸ் அதிகாரி வேடமாம்.



'பரியேறும் பெருமாள்' படம் விமர்சன, வசூல் ரீதியாக பெரும் வரவேற்பைப் பெற்றது.

இந்தப் படத்தின் இயக்குநர் மாரி செல்வராஜின் இயக்கத்தில் தனுஸ் நடிக்கவுள்ளார்.





தீபிகா படுகோன் - ரன்வீர் சிங் இந்து, சீக்கிய முறைப்படி திருமண பந்தத்தில் இணைந்தனர்.


திருமணத்துக்காக தீபிகா ஒரு கோடி இந்திய ரூபா மதிப்பில் தங்க, வைர நகைகளை வாங்கினார்.

இதற்காக அவருக்கு பிரத்தியேகமாக கடை திறக்கப்பட்டது.




# வெற்றியாளர்கள்

தொழில்சார் ரென்னிஸ் சங்கத்தால் (ஏ.ரி.பி) 1975 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் வழங்கப்பட்டு வரும் விருதுகள் வரிசையில் இந்தாண்டு விருதுக்கான வெற்றியாளர்கள் விபரம் கடந்தவாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம் கடந்தவருட நடுப்பகுதியில் இருந்து இறுதிவரை காயம் காரணமாக விளையாடாமல் இருந்த ஜோகோவிச் அதிலிருந்து மீண்டு 4 மாதங்களிலேயே முதலிடத்தைக் கைப்பற்றியதால் சிறந்த மீள்வருகையை நிகழ்த்திய வீரருக்கான விருதையும் இந்தாண்டின் சிறந்தவீரருக்கான விருதையும் ஒருங்குசேரப் பெறுகின்றார். அந்தவகையில் சிறந்த வீரருக்கான விருதை ஜோகோவிச் பெறுவது இது 5 ஆவது தடவையாகும். அதேசமயம் விளையாட்டுணர்வு மிக்க வீரர் விருதை 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரபெல் நடால் இரண்டாவது தடவையாகப் பெறுகின்றார். இதன் மூலம் கடந்த 7 வருடங்களாகத் தொடர்ச்சியாக இந்த விருதைப்பெற்று வந்த றோஜர் பெடரருக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார். ஆனாலும் ரசிகர்களின் விருப்பத்துக்குரிய வீரர் விருதுக்கு றோஜர் பெடரரே 16 ஆவது வருடமாகத் தொடர்ச்சியாகத் தெரிவு செய்யப்பட்டுச் சாதனை படைத்துள்ளார். சிறந்த புதுமுக வீரருக்கான விருதை அவுஸ்ரேலியாவின் அலெக்ஸ் டி மினரும் சிறந்த பயிற்சியாளர் விருதை ஜோகோவிச்சின் பயிற்சியாளரான மரியன் வஜ்டாவும் பெறுகின்றார்கள். தரவரிசையில் முதலிடம் பிடித்ததற்கான கிண்ணத்தை ஜோகோவிச் தற்போது லண்டனில் நடைபெற்று வரும் ஏ.ரி.பி சம்பியன்ஷிப் தொடரின் ஆரம்பநாளன்று (11.11.2018) பெற்றாலும் ஏனைய விருதுகள் நாளையதினம் (18.11.2018) நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நியமனம் நீடிப்பு

இந்தப் பருவகால லாலிகா உதைபந்தாட்டத் தொடர் ஆரம்பிக்கப்பட்ட போது றியல் மட்ரிட் அணியின் முகாமையாளராக ஸ்பெயினின் ஜுலொன் லொப்ரெய் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனாலும் லாலிகா தொடரிலும் சம்பியன்ஸ் லீக் தொடரிலும் றியல் மட்ரிட் அணி தொடர்ச்சியான தோல்விகளைச் சந்தித்தது. அதிலும் எல்கிளாசிகோ போட்டியில் பரம எதிரியான பார்சிலோனாவிடம் படுதோல்வி அடைந்ததையடுத்து மூன்று வாரங்களுக்கு முன்னர் ஜுலொன் லொப்ரெய் அதிரடியாக முகாமையாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இதையடுத்து அணியின் இடைக்கால முகாமையாளராக றியல் மட்டிட் 'B' அணியின் முகாமையாளராக விளங்கிய சண்டியாகோ சொலாரி நியமிக்கப்பட்டிருந்தார். ஆனாலும் ஸ்பெயின் உதைபந்தாட்டச் சங்க விதிகளின் படி இடைக்கால முகாமையாளராக நியமிக்கப்பட்டவர் 15 நாட்கள் மட்டுமே அப்பதவியில் நீடிக்க முடியும்.

அந்தவகையில் 15 நாட்களுக்குள் புதியதொரு முகாமையாளரைத் தேடும் முயற்சியில் றியல் மட்ரிட் அணி நிர்வாகம் இறங்கினாலும் அது சாத்தியப்படவில்லை. குறிப்பாக அவ்விடத்திற்கு செல்சி அணியின் முன்னாள் முகாமையாளரான அன்ரோனியோ கொன்ரே நியமிக்கப்படலாம் என்ற ஊகங்கள் இருந்தாலும் அதுவும் கைகூடவில்லை. எனவே தற்போது சண்டியாகோ சொலாரியையே 2021 ஜுன் மாதம் வரை அணியின் நிரந்தர முகாமையாளராக நியமிப்பதற்கு ஒப்பந்தம் செய்துள்ளார்கள். இதற்கு சண்டியாகோ சொலாரி றியல் மட்ரிட்டின் முகாமையாளராக நியமிக்கப்பட்ட பின்னர் விளையாடிய நான்கு போட்டிகளிலும் றியல் மட்ரிட் வெற்றிபெற்றுள்ளமையும் முக்கிய காரணம் எனலாம். 42 வயதான சண்டியாகோ சொலாரி ஆர்ஜென்ரீன அணியின் முன்னாள் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.



# மன்னிப்புக் கோரல்

கடந்தவாரம் நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரின் இங்கிலாந்தின் மன் செஸ்ரர் சிற்றி – உக்ரைனின் சாக்ரர் டொனெட்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டியில் மன்செஸ்ரர் சிற்றி அணி 6 : 0 என்று கோல் மழை பொழிந்து வெற்றி பெற்றிருந்தது. இப்போட்டிக்கு மைதான நடுவராக விளங்கியவர் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த விக்ரர் கசாய். இப்போட்டியின் 22 ஆவது நிமிடத்தில் மன்செஸ்ரர் சிற்றியின் முன்கள வீரரான ரஹீம் ஸ்ரேலிங் எதிரணியின் பெனால்ரி பகுதியினுள் பந்தைக் கொண்டு சென்ற போது கீழே விழுந்தார். அவர் எவ்வாறு விழுந்தார் என்பதைச் சரியாக அவதானிக்காத மைதான நடுவர் சாக்ரர் டொனெட்ஸ் அணியின் பின்கள வீரரான மிகோலா மட்வியன்கோ தான் பின்னால் இருந்து ரஹீமை முறை தவறி வீழ்த்தியதாகக் கருதி உடனடியாகவே பெனால்ரி வழங்கிவிட்டார். அந்தப் பெனால்ரியை மன்செஸ்ரர் சிற்றியின் கப்ரியல் ஜீசஸ் கோலாக்கியும் இருந்தார். ஆனால் தொலைக்காட்சி ஒளிபரப்பில் ரஹீம் தானாகவே கால்தடுக்கி விழுந்தது தெளிவாகத் தெரிந்ததனால் அந்தத் தீர்ப்பு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இதுகுறித்து மறுநாள் ரஹீம் 'நான் பந்தைக் கொண்டு சென்றேன். அடுத்து என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. நான் மைதானத்தில் இருந்து எழும்பினாலும் அது குறித்துக் கூற அப்போது எனக்குத் தோன்றவில்லை. நான் விழுந்தது எனது கெட்ட நேரமே. இதற்காக மைதான நடுவரிடமும் சாக்ரர் டொனெட்ஸ் அணியிடமும் மன்னிப்புக்கோருகின்றேன்' எனத் தெரிவித்துள்ளார். ஆனாலும் மன்னிப்புக் கேட்க வேண்டிய தவறான தீர்ப்புக் கொடுத்த நடுவர் இப்பத்தி எழுதும்வரை மன்னிப்புக் கேட்கவில்லை.

இம்முறை நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நடுவர்களின் முடிவை மறுபரிசீலனை செய்ய Video Assistant Referee தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டதைப் போன்று கழகங்களுக்கிடையிலான போட்டிகளிலும் அத்தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தையே இந்தச்சம்பவம் வெளிப்படுத்துவதாக உள்ளது.



# 5 ஓட்டங்கள்

கிரிக்கெட்டில் களத்தடுப்பில் ஈடுபடும் அணிவீரர்கள் பந்தைச் சேதப்படுத்துதல், விக்கெட் காப்பாளருக்குப் பின்புறம் வைக்கப்பட்டிருக்கும் ஹெல்மட்டில் பந்து படுதல் உட்பட சில சந்தர்ப்பங்களில் எதிரணிக்கு 5 ஓட்டங்கள் நடுவரால் வழங்கப்படுகின்றன. அதுபோலவே நோபோல் பந்து நான்கு ஓட்டங்களாக மாறும்பொழுதும் 5 ஓட்டங்கள் கிடைக்கின்றன. ஆனாலும் துடுப்பாட்ட வீரர்கள் ஒரு பந்தில் அதிக பட்சமாக மூன்று ஓட்டங்களையே பெரும்பாலும் ஓடிப் பெற்றிருக்கின்றார்கள். ஆனால் துபாயில் நடைபெற்ற பாகிஸ்தான் – நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்தின் மோசமான களத்தடுப்பால் பாகிஸ்தான் வீரரான பஹீம் அஸ்ரப் ஒரு பந்தில் 5 ஓட்டங்களை ஓடிப் பெற்றிருக்கின்றார்.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் 49.4ஆவது ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அப்போது ஆடுகளத்தில் பஹீம் அஸ்ரப்பும் அசீவ் அலியும் ஆடிக்கொண்டிருந்தார்கள். 49 ஆவது ஓவரின் 5 ஆவது பந்தை நியூசிலாந்தின் டிரெண்ட் போல்ட் வீச அதனை எதிர்கொண்ட பஹீம் அஸ்ரப், டீப் ஸ்குயார் லெக்கில் அடித்து விட்டு மூன்று ஓட்டங்களை இருவரும் ஓடினார்கள். எல்லைக்கோட்டருகில் அப்பந்தைத் தடுத்த நியூசிலாந்து வீரர் அதனை எடுத்து விக்கெட் காப்பாளரான ரொம் லதமிடம் எறிந்தார். அதனைப் பிடித்த ரொம் லதம் மூன்றாவது ஓட்டத்தை தடுக்கும் விதமாக பந்துவீச்சாளர் முனைக்குப் பந்தை எறிந்தார். ஆனாலும் பந்து விக்கெட்டில் படாமல் லோங் ஓவ்பிற்கு சென்றதனால் மீண்டும் ஒரு ஓட்டத்தை ஓடினார்கள். அந்தப்பந்தை மற்றொரு நியூசிலாந்து வீரர் ரொம் லதத்தை நோக்கி எறிந்தாலும் அது அவரைத் தாண்டிச் சென்றதனால் அதற்குள் மேலும் ஒரு ஓட்டத்தை ஓடினார்கள். இதன்மூலம் ஒரு பந்தில் மொத்தம் 5 ஓட்டங்களை ஓடிப் பெற்ற சாதனையை பஹீம் அஸ்ரப் படைத்தார். இந்தத் தொடரில் நியூசிலாந்து அணியின் களத்தடுப்பு மிகச்சிறப்பாக இருந்தாலும் இப்படி ஒரு மோசமான சாதனை நிகழ்ந்தது துரதிர்ஷ்டவசமானதே.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 17.11.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.